Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-888)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 06 (09.05.2003) வெள்ளிக்கிழமை இதழ் : 217




வன்னிக்கு விஜயம் செய்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வரவேற்பதை முதலாவது படத்திலும், பேச்சுக்களில் பங்கேற்ற நோர்வேத் தரப்பினர் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## புலிகளின் அரசியல் - ராணுவப் பிரதிநிதிகளுடன் நோர்வே குழு சந்திப்பு

விடுதலைப் புலிகளின் அரசியற் தலைவர்களையும், இராணுவத் தளபதிகளையும் நோர்வே தூதுக்குழுவினரும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரும் சந்தித்து நேற்று பேச்சு நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணிமனையில், நேற்றுக்காலை 11.30 மணிமுதல் 1.30 மணிவரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் - கலந்துகொள்வதற்கென நோர்வே தூதுக் குழுவினரும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரும் - விமானப்படைக்குச் சொந்தமான விசேட உலங்கு வானூர்தி மூலம், நேற்றுக் காலை 10.30 மணியளவில், கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கினர். இவர்களை - தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தயாநிதி மாஸ்ரர் ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

பின்னர் - இக்குழுவினர், தமிழீழ காவற்துறையினரின் விசேட மோட்டார் சைக்கிள் படையணியின் பாதுகாப்புடன் கிளிநொச்சியிலுள்ள ஆதரவற்ற முதியோர்கள் தங்கியிருக்கும், முதியோர் இல்லத்தைப் பார்வையிட்டனர். அதன்பின் 11 மணியளவில் அரசியற்துறை நடுவப்பணியகத்தை இக்குழுவினர் வந்தடைந்தனர்.

இதேவேளை, முன்னதாக - புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆக்கபூர்வமான முடிவு அரசு தராவிடில் புலிகளின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

## எல்லாமே அரசின் கையில் - பாலா



(கிளிநொச்சி)

"அரசாங்கம் உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காவிட்டால் - பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருக்

## அடிக்கடி வெளியே சென்று உரையாடிய ரெலவ்சன்!



(கிளிநொச்சி)

**"அரசாங்கம் உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காவிட்டால் - பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருக்கும் எமது முடிவில் தொடர்ந்து நாங்கள் உறுதியாக இருப்போம். இனி எல்லாமே அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது என்பதை நோர்வேக் குழுவினரிடம் வலியுறுத்தியிருக்கிறோம்" என அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்ற நோர்வே குழுவினருடனான சந்திப்பைத் தொடர்ந்து, பிற்பகலில் செய்தியாளரிடம் அதுகுறித்து பாலசிங்கம் விபரித்தார். அவர் இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தையை தற்காலிகமாக ஒத்திவைத்து, ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அடிக்கடி வெளியே சென்று உரையாடிய ரெலவ்சன்!



விடுதலைப் புலிகளுக்கும் நோர்வேக் குழுவினருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது, கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன் - அடிக்கடி வெளியே சென்று தனது கையடக்கத் தொலைபேசியில் உரையாடியதை அவதானிக்க முடிந்தது.

பேச்சு நடைபெற்ற இரண்டு மணி நேரத்தில் மூன்று தடவை அவர் இவ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கனரக ஆயுதங்கள் அனைத்தும் மூன்றாம் தரப்பு கண்காணிப்பில்!

## நம்பியாரின் அறிக்கையில் பிரஸ்தாபம்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக - இந்திய இராணுவ நிபுணர் ஜெனரல் சதீஷ் நம்பியார் சமர்ப்பித்த அறிக்கை, இன்று பொது மக்களுக்கு வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த அறிக்கை நேற்று அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

அதில் இடம்பெற்றுள்ள அம்சங்கள் வெளியிடப்படாதபோதிலும் - இருதரப்பும் முகாம்களை மீளமைத்துக் கொள்ளவேண்டுமெனக் குறிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## *விண்ணாணம் விநாசியர்*



இலங்கைக்கும் பொஸ்னியாவுக்கும் நிரம்பத் தூரமெண்டு நம்பியாருக்குத் தெரியாதோ....?

# நடமாட்டத்தை தடுத்தபோதும் நாம் பொறுமை காக்கிறோம்

## நோர்வே குழுவினரிடம் கடற்புலிகளின் தளபதி சூசை

வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் - கடற்புலிகளின் சுதந்திர நடமாட்டத்துக்கு அரசு தொடர்ந்து தடைவிதித்து வருகிறது. நாம் பொறுமையுடன் எத்தனையோ ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை இந்தப் போர்நிறுத்த காலத்தில் சகித்து வருகின்றோம் என கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை, நேற்று நோர்வே குழுவினரிடம் எடுத்துக்கூறினார்.

நேற்று, விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே குழுவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது, கேணல் சூசை கடலில் ஏற்படும் நடைமுறைப்பிரச்சினைகள் தொடர்பாக நோர்வேக் குழுவிற்குத் தெளிவுபடுத்தினார்.

அப்போது, அவர் மேலும் கருத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)


Expo Aviation (Pvt) Ltd.

**EXPO Aviation**

**எக்ஸ்போ**

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999

071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290 (சி.913 )



# தெங்கு பயிர்ச்செய்கையாளருக்கு கற்பகதரு கடன் திட்டம் மீள அமுல்!

## தெங்கு அபிவிருத்திச் சங்கத் தலைவர் தகவல்

(கொழும்பு)

தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான, கற்பகதரு கடன் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்குத் தெங்குப்பயிர் அபிவிருத்திச்சபை தீர்மானித்திருக்கிறது.

தெங்கு அபிவிருத்திச் சபையின் தலைவர் இத்தகவலை வெளியிட்டார். புதிதாகத் தென்னைகளைப் பயிரிடுவோர் மற்றும் தென்னையில் ஊடுபயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளவுள்ளோருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் கடனுதவிகள் வழங்கப்படும் எனத்தெரியவருகிறது.

அரை ஏக்கருக்குக் கூடிய நிலப் பரப்பைக் கொண்ட தெங்குப்பயிர்ச் செய்கையாளருக்கே இந்தக் கடனுதவிகள் வழங்கப்படவுள்ளது. மக்கள் வங்கி, இலங்கை வங்கி உள்ளிட்ட பல வர்த்தக வங்கிகள் மூலம் இந்தக் கடனுதவிகள் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் தெங்கு அபிவிருத்திச்சபைத் தலைவர் தெரிவித்தார்.

### பனை தறிக்க புதிய நடைமுறை

யாழ்.குடாநாட்டிலுள்ள மக்களின் சொந்தத் தேவைக்காக பனைமரம் தறிப்பதற்கு, புதிய நடைமுறைகளை அமுல்படுத்தியுள்ளதாக, சகல பிரதேச செயலகங்களுக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி - பொதுமக்கள், தமக்குத் தேவையான பனைமரங்களைத் தறிப்பதற்கான அனுமதியை, தங்கள் பகுதி கிராம அலுவலர் ஊடாக, பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பித்து, பிரதேச செயலர் தலைமையில் இயங்கும் சூழல் பாதுகாப்புக் குழுவின் சிபார்சுடன், பனைமரங்களைத் தறிப்பதற்குரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (113)

### ஐஸ் பதனிடல் நிலையத்தை திறக்கக் கோரிக்கை

யாழ். முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள வடமாகாண மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் ஐஸ் பதனிடல் நிலையத்தைத் திறக்க அனுமதிக்குமாறு - புனர்வாழ்வு, மீள்குடியேற்றத்துறை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா - பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக, வடபகுதி இராணுவத் தளபதியுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யுமாறு - அவர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கேட்டுள்ளார்.

# சாவகச்சேரி சந்தை தென்புற வீதி திறப்பு

கடந்த 3 வருடங்களாக பொதுமக்கள் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டிருந்த சாவகச்சேரி பொதுச் சந்தைக்குத் தெற்குப்புறமாக உள்ள வீதி, மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

இவ்வீதியுடன் இணையும் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயமான தனங்களப்பு வீதியில் வீதித் தடை போடப்பட்டிருந்ததால், பொதுச் சந்தையின் தெற்குப்புறவீதி தடை செய்யப்பட்டிருந்தது.

தனங்களப்பில் உள்ள புகையிரத கடவைக்கு அண்மையில் வீதித் தடைக்கம்பம் தற்போது மாற்றப்பட்டுள்ளதால், பொதுமக்கள் பாவனைக்கு இவ்வீதி திறந்துவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலய தனங்களப்பு வீதி தொடர்ந்தும் தடைசெய்யப்பட்டுள்ளதோடு, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு செல்பவர்கள் அனுமதிபெற்றே செல்வதும் குறிப்பிடத்தக்கது. (34)

# யாழ் பிரதான வீதியில் படையினர் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர். யாழ். பிரதான வீதியூடாக நேற்று முன்தினம் ஒரு தொகுதி படையினர் சிங்களமொழியில் கோஷங்களை எழுப்பியவாறு கோட்டைப் பகுதியை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

அண்மையில் அரியாலைப் பகுதியிலும் படையினரின் இத்தகையதொரு ஊர்வலம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரா)

# சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் தேசிய பாடசாலைகளில் வீழ்ச்சி

(கொழும்பு)

தேசியப் பாடசாலைகளில் - க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள், வீழ்ச்சிப் போக்கைக் காண்பிப்பதாகப் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக, கல்வி அமைச்சின் தேசியப் பாடசாலைப் பிரிவுக்கு பெற்றோர் புகார் செய்துள்ளனர்.

5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்கள் மட்டுமே, தேசியப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைகளில், தேசியப் பாடசாலைகளால் மாணவர்களுக்குப் போதிய பெறுபேற்றை பெற்றுக்கொடுக்க முடியவில்லை என்றும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
சிவாஜி, பத்மினி நடித்த
தில்லானா மோகனாம்பாள்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
CHINA STRIKE FORCE
(சி-882)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின் நடித்த
புதிய கீதை
10.30, 2.30, 6.30, 9.30
(சி-883)





இசைப் பிரியர்களுக்கோர் நற்செய்தி.....
வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக
யாழ்.பல்கலைக்கழக முன்னணிப் பாடகர்களும்,
யாழ் - முன்னணி இசைக்கலைஞர்களும்
இணைந்து வழங்கும்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
● வித்தியாசமான அரங்க வடிவமைப்பு
பொன்மாலைப் பொழுது
● யாழ்.முன்னணிக் கலைஞர்களின் சங்கமம்
இடம் : மானிப்பாய் இந்துக் கல்லூரி
காலம் : 11.05.2003 (ஞாயிறு) மாலை 6.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனுசரணை: நமது ஈழநாடு
யாழ். பல்கலைக்கழக
முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம்



# மக்கள் வங்கி

## அறிவித்தல்

மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையிலும், சங்கானைக் கிளையிலும் 31.12.1984 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள், பின்வரும் திகதிகளில் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில்

**பகிரங்க ஏல விற்பனை**

செய்யப்படும்

| கிளைகளின் விபரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| வல்வெட்டித்துறை | 10.05.2003 இலிருந்து - 12.05.2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| சங்கானை | 13.05.2003 இலிருந்து - 17.05.2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

யாழ். பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.


(சி-914)

# குடாநாட்டு உயர் பாதுகாப்பு வலயங்கள் சுருக்கப்படுமே தவிர அகற்றப்படாது!

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன

(கொழும்பு)

குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களைச் சுருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமே தவிர அவை அகற்றப்படமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.



செய்தியாளர் மாநாட்டில் திலக் மாரப்பன, இந்தியப் படை அதிகாரிகள் ஜெனரல் சதீஸ் நம்பியார் மற்றும் வைஸ் அட்மிரல் ஜேக்கப்

நேற்று முன்தினம் நடத்திய செயதியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்குமாறு விடுதலைப் புலிகளோ அல்லது பொதுமக்களோ கோரவில்லை. பலாலியில் மட்டுமே இனி வரும் காலத்தில் உயர்பாதுகாப்பு வலயம் பேணப்படும்.

இதையும் சுருக்கி மக்களின் மீள்குடியமர்வுக்கு வழிசெய்யப்படும். தமிழ் மக்களும் இந்த நாட்டு மக்களே என்பதால் அவர்களை மீளக்குடியமர்த்துவது எமது கடமையாகும்.

இராணுவமுகாம்களை விலக்கி விட்டுத் தேசிய பாதுகாப்பை அச்சுறுத்தலுக்குள்ளாக்க அரசாங்கம் தயாராகவில்லை. இந்திய இராணுவ நிபுணர்களின் ஆலோசனையுடன்தான் இராணுவமுகாம்களை மீள்இடம்மாற்ற விரும்புகிறோம்.

51 ஆவது டிவிசன் மற்றும் 512 ஆவது பிரிகேட் தளங்கள் அமைந்துள்ள ஞானம்ஸ், சுபாஸ் விடுதிகள் அடங்கிய பிரதேசத்தைவிட்டுப் படையினரை வெளியேற்றுமாறு அரசியற்கட்சிகளும், தமிழ்மக்களும் விடுத்த கோரிக்கைகள் நியாயமானவையே.

இந்தத் தளத்தை வேறிடத்துக்கு மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்கு எதிர்ப்புகள் இருந்தால் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடத் தயாராக இருக்கின்றோம்.

குடாநாட்டில் இராணுவத்தினரின் பிரசன்னத்தைக் குறைக்க, முகாம்களை இடமாற்றம் செய்வது தொடர்பாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, இராணுவ அதிகாரிகள் அரச அதிகாரிகள் ஆகியோர் புதிய இடங்களைத் தெரிவுசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

புலிகளிடம் சீருடை தரித்த போராளிகளும், ஆயுதம் தரித்த படகுகளும் இருப்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

நிலத்திலும், கடலிலும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை இவர்கள் வைத்துள்ளனர்.

புலிகளை யுத்தம் மூலம் அழிக்கவே முயற்சித்தோம். இப்போது அவர்களுடன் கலந்துரையாடல் நடத்திவருகிறோம்.

போர்நிறுத்த உடன்பாட்டின்படி முல்லைத்தீவுக் கரையை அண்மிக்க வேண்டாம் என்று கடற்படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. புலிகளுடன் பிரச்சினைகளை ஏற்படுத்தவேண்டாமென்று கடற்படை கேட்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் இராணுவப் புலனாய்வாளர்கள் அல்ல.

எனினும், இந்தச் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மேலும் தெரிவித்தார்.

(க)

# பேச்சில் முஸ்லிம்களுக்கு தனியான இடம் தேவை!

## ஹக்கீம் நோர்வேயிடம் மீண்டும் கோரிக்கை



முஸ்லிம்களுக்குப் பேச்சுக்களில், தனியான இடமளிக்க ஏற்பாடுகளைச் செய்து தருமாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் - நோர்வே அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை மூதூருக்கு விஜயம் செய்த ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி மூலம் இந்தக் கோரிக்கை நோர்வே அரசாங்கத்திடம் விடுக்கப்பட்டது.

மூதூரில் யசுஷி அகாஷி கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றிய ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது - தமிழ்,முஸ்லிம் இனங்களுக்கிடையில், பிளவுகளை ஏற்படுத்த சில தீயசக்திகள் முயற்சிக்கின்றன.

மீளக்குடியமர்வு நடைபெறும் பகுதிகளில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி - மக்கள் நிரந்தரமான தீர்வைப்பெறத் துணிவுடனும், பொறுமையுடனும் ஒத்துழைக்க வேண்டும். எப்படியும் புலிகளை ரோக்கியோவில் நடைபெறவுள்ள மாநாட்டிற்கு அழைத்துச் செல்வோம் என்று தெரிவித்தார்.

# தாய்லாந்துப் பிரதமர் அடுத்தவாரம் வருகிறார்

(கொழும்பு)

தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் சினவத்ரா இரண்டு நாள் விஜயமாகக் கொழும்பு வரவுள்ளார். எதிர்வரும் 14 ஆம் திகதி கொழும்பு வரும் இவர், இங்கு நடைபெறும் வெசாக் நிகழ்வுகளில் அரச விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள், அரசியல்வாதிகளையும் - தாயலாந்துப் பிரதமர் சினவத்ரா சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதன்போது தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும். இந்தச் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான சகல வசதிகளையும் செய்துகொடுப்பதற்குத் தாய்லாந்து தயாராக இருப்பதையும் பிரதமர் சினவத்ரா வெளிப்படுத்துவார் என்றும் தாய்லாந்து அரச வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன், தாய்லாந்துப் பிரதமர் இங்கு தங்கியிருக்கும்போது, அநுராதபுர புனித வெள்ளரச மரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள தங்கவேலியையும் திறந்து வைப்பார்.

சியாமோபோதி நிக்காயவின் 250 ஆவது வருட பூர்த்தி விழாவிலும் தாயலாந்துப் பிரதமர் கலந்துகொள்ளவுள்ளார்.



நோர்வே சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் வவுனியாவில் போரூட் நிறுவன அலுவலகத்துக்கு விஜயம் செய்யபோது எடுத்த படத்தை முதலாவதாகவும் - பூந்தோட்டம் அகதி முகாமில் மக்களுடன் உரையாடியபோது எடுத்த படத்தை இரண்டாவதாகவும் காணலாம்.

# தேசிய விளையாட்டு விழா செப்ரெம்பரில் யாழ்.நகரில்!

இருபத்தொன்பதாவது தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதான முடிவில் எந்த மாற்றமும் கிடையாது என்று விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தவருட தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக விளையாட்டுத் துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் விளையாட்டுத்துறை அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து நிலைமையை ஆராய்ந்திருந்தனர்.

தற்போது இந்தத் தேசிய விளையாட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருவதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ தெரிவித்தார். செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்த தேசிய விளையாட்டு விழாவில், நாடு முழுவதுமிருந்து பெருமளவான விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த விளையாட்டு விழாவுக்கு முன்னோடியாக மகியங்கனையில் எதிர்வரும் 12 ஆம் திகதி மரதன் ஓட்டப் போட்டி மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ தெரிவித்தார்.

# காணிப் பிணக்குத் தீர்வுக்கு அம்பாறை 4 வலயமாக பிரிப்பு

## புலிகள் - முஸ்லிம் தரப்பினர் சந்திப்பில் முடிவு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்களின் காணிப் பிணக்குகளைத் தீர்க்க, அம்பாறை மாவட்டத்தை நான்கு வலயங்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக வலயக் குழுக்களை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்களின் உதவியுடன் வலயக் குழுக்கள் - காணிகளின் உரிமையாளர்களைக் கண்டு அதன்படி காணிகளை ஒப்படைக்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட தமிழ்-முஸ்லிம் மக்களின் காணிகள் தொடர்பாக ஆராயும் உபகுழுக் கூட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அம்பாறை மாவட்ட தலைவர் கார்ல் யுலிசன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் தலைமையில், மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், புலிகளின் அம்பாறை மாவட்டத் தளபதி ஸ்ரான்லி, அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா, அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் ஹென்றி, அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் நிவராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முஸ்லிம்கள் சார்பில் எம்.ஐ.எம்.முகிதீன், டாக்டர் ஏ.எல்.எம்.ஜமீல், நு.்.லீப், ஐ.எம்.இப்ராஹிம், மௌலவி எஸ்.எம்.ஏ.கரீம், டாக்டர் ஜபார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அம்பாறை நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேருவும் கலந்துகொண்டார்.

பொத்துவில் லகுகலை பிரதேச செயலகப் பிரிவு முதல் வலயமாகவும், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில் இரண்டாவது வலயமாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

நிந்தவூர், காரைதீவு, கல்முனை ஆகிய பகுதிகள் மூன்றாவது வலயத்திலும், சம்மாந்துறை நாவிதன் வெளி, அம்பாறை, குமண, உகண, இறக்காமம் ஆகிய பகுதிகள் நான்காவது வலயத்திலும் இடம்பெறுகின்றன.

இதன்படி முதலாவது வலயக் குழுவுக்கு - புலிகள் தரப்பில் ஜனார்த்தனும், முஸ்லிம்கள் தரப்பில் கரீம் மௌலவியும், இரண்டாவது வலயத்துக்கு - புலிகள் சார்பில் பாவாவும், முஸ்லிம்கள் தரப்பில் டாக்டர் ஜபாரும் -

மூன்றாவது வலயத்துக்கு - புலிகள் தரப்பில் நிவராஜ்ஜும், முஸ்லிம்கள் சார்பில் டாக்டர் பாரூக்கும், நான்காவது வலயத்துக்கு - புலிகள் தரப்பில் ஹென்றியும் முஸ்லிம்களின் சார்பில் இப்ராஹிமும் தலைமையேற்பர்.

முதலாவது வலயக்குழுவின் கூட்டம் பொத்துவில் பிரதேசசெயலகத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதியும், இரண்டாவது வலயத்தின் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளன.

மூன்றாவது வலயத்தின் கூட்டம் 21 ஆம் திகதி காரைதீவுப் பிரதேச செயலகத்திலும், வலயம் நான்கின் கூட்டம் அம்பாறை கச்சேரியில் 22 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டங்களில் ஆராயப்பட்டே காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

# விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர் கடற்கொந்தளிப்பில் சிக்கினர்!

## ஒருவரைக் காணவில்லை

மன்னாரிலிருந்து நேற்று முன்தினம் இராமேஸ்வரம் நோக்கிச் சென்ற இந்திய மீனவர்கள் கடற்கொந்தளிப்புக்குள் அகப்பட்டு தவித்து நின்றபோது, கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு மீண்டும் மன்னார்க் கரைக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டனர்.

ஐந்து மீன்பிடிப் படகுகளில் எட்டு மீனவர்கள் இராமேஸ்வரம் நோக்கிப் பயணததை மேற்கொண்டிருந்தனர். இவர்களே கடற்கொந்தளிப்பில் சிக்கினர். இவர்களில் ஒருவரான அ.அருளானந்தம் என்பவரையும், அவரது படகினையும் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மன்னார் சவுத்பார் பிரதேசத்தில் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது. இந்தச் சடலம் இன்னமும் அடையாளங் காணப்படவில்லை.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இலங்கைக் கடற்பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இந்த இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் விடுதலையாகித் திரும்பும்போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

# மிதிவெடி விழிப்புணர்வாளர் பயிற்சிப் பட்டறை பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் யுனிசெப் நிறுவன ஆதரவுடன் வெண்புறா நிறுவனம் மேற்கொள்ளவுள்ள மிதி வெடி அபாயக் கல்வித் திட்டத்தில் ஈடுபடும் விழிப்புணர்வாளர்களுக் கான பயிற்சிநெறி கடந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமானது.

இந்நிகழ்வில் மங்கள விளக் கினை யுனிசெப் நிறுவன யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர் செல்வி செலின் ஏற்றி வைத்தார். யுனிசெப் நிறுவன மிதிவெடி அபா யக் கல்வித்திட்ட இணைப்பாளர் நேசன் மற்றும் முன்னாள் அரச செயலகத் திட்டப் பணிப்பாளர் க. பாலகிருஷ்ணன் ஆகியோர் பயிற்சி நெறிகளை நடாத்தினர்.

இப்பயிற்சிநெறி 10 நாட்கள் நடைபெற்றது. வள அணியினராகச் சுகவாழ்வு நிலையப் பணிப்பாளர், பணியாளர்கள், யுனிசெப் நிறுவன பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட மிதி வெடிச் செயற்பாட்டு அலுவலக அதிகாரிகள், அரச செயலக அதி காரிகள், வெண்புறா நிறுவனப் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை புனரமைப்பதற்கான பணிகளை ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி தலைமையிலான குழுவினர் பார்வையிடுவதை முதலாவது படத்திலும், வைத்தியசாலை இயங்கும் பகுதியில் அவர்கள் மக்களுடன் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# புலிகளை பேச்சுக்கு அழைக்க சர்வதேசத்துக்கு உரிமையில்லை

## ஜனாதிபதி கருதுவதாக பேச்சாளர் கூறுகிறார்

மனித உரிமைகளைப் பாது காக்க நடவடிக்கை எடுக்கும் வரை சமாதானப் பேச்சுக்களில் மீள இணைந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளை வலியுறுத்தும் உரிமை சர்வதேச சமூகத்துக்குக் கிடையாது என்று ஜனாதிபதி கருதுவதாக, அவரின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் ஜனாதிபதியின் இக்கருத்தை வெளியிட்டார். ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவிக்கும்போது -

இனப்பிரச்சினை குறித்த முக் கிய விடயங்கள் பேச்சுக்களில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. வடக்கு - கிழக்கில் அடிப்படை உரி மைகளும், ஜனநாயக உரிமைக ளும் நிலைநாட்டப்படவில்லை. இராணுவத்தினருடன் இணைந்து பணியாற்றும் தமிழ்ப் புலனாய்வா ளர்கள் பலர் கொல்லப்படுகின்றனர்.

உரிய இணக்கப்பாடுகள் ஏற் படும்வரை இராணுவமுகாம்களைத் தறபோதைய இடங்களிலிருந்து அகற்றுவது உசிதமானது அல்ல என ஜனாதிபதி கருதுகிறார்.

யாழ்.நகரிலுள்ள இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றுவது தொடர்பாக அரசாங்கம் தீர்மானங்கள் எடுக்கவில்லை என் றும் ஜனாதிபதியின் ஊடகப்பேச்சா ளர் தெரிவித்தார்.

யாழ்நகர இராணுவமுகாம் தொடர் பாக ஜனாதிபதி தீவிர கவனம் செலுத்திவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இந்து மாநாட்டு சிறப்பு நிகழ்ச்சிகள்

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு - புத்தூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இன்று காலை 9 மணிக்குச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் எஸ்.தர்மரட் ணம் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில், மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

# வலயக்கல்விப் பணிமனை விரைவில் மாங்குளத்துக்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம், துணுக்காய் வலயக்கல்விப் பணிமனை விரைவில் மாங்குளத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. இதுவரை துணுக்காய் கல்விப் பணிமனை - மல்லாவியிலேயே இயங்கி வந்தது.

தற்போது மாங்குளம் பகுதியில் புதிதாக வலயக்கல்விப் பணிமனை அமைக்கப்பட்டு வருகின்றது. இதுவரை 13 லட்சம் ரூபா இதற்கெனச் செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ்ப்பாண நூலகக் கட்டடம் மாநகரசபையிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிதாகப் புனரமைக்கப்பட்ட யாழ்.பொதுநூலகக் கட்டடத்தைக் கட்டடத் திணைக்களத்திடமிருந்து - யாழ். மாநகரசபை நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாகக் கையேற்றது.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந் நிகழ்வில் - மாநகரசபை அதிகாரிகளும், கட்டடத் திணைக்களப் பொறி யியலாளர்களும் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (13)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஏழாவது அகவையில்



பெயர் : சி.குருபரன்
முகவரி : ரவி இல்லம், வதிரி.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : வி.சுகன்யா
முகவரி : கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


# சின்னஞ்சிறு செய்திகள்

### யாத்திரை தல திறப்பு விழா

(நெல்லியடி)

புனரமைக்கப்பட்ட பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை யாத்திரை தல திறப்பு விழா, எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலை மையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து - மறுநாள் பற்றிமா அன்னையின் திருநாள் கொண்டா டப்படவுள்ளது. அத்துடன், அன்றைய தினம் இந்த யாத்திரை ஸ்தலத்தில் 5 திருப்பலிகள் இடம்பெறவுள் ளன. (13)

### அறிவிப்பு பலகைகளில் தமிழ்ப் பிழைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரப் பகுதியில், அண் மையில் தனியார் நிறுவனம் ஒன் றினால் நடப்பட்ட வீதி அறிவிப்பு பலகைகளில் எழுத்துப் பிழைகள் காணப்படுவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சிங்களம், ஆங்கில மொழிகளில் சரியாகக் காணப்படும் அறிவிப்புக் கள் தமிழில் மட்டும் பிழையாகக் காணப்படுகின்றன. (111)

### குடாநாட்டில் வேகமாகப் பரவும் கண்நோய்

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலவும் கடும் வெப் பமான சூழ்நிலையில், குடாநாட்டில் கண்நோய் வேகமாகப் பரவிவரு கின்றது. கண்நோயால் பீடிக்கப் பட்ட பலர், யாழ்.போதனா வைத் தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்வதையும் காணமுடிகின்றது. (111)

### வீட்டுத் தோட்டங்களுக்கு இலவச உள்ளீடுகள்

(மீசாலை)

சாவகச்சேரியை அண்டிய பகுதி களில் மாதிரி வீட்டுத் தோட்டத் திற்கான உள்ளீடுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக விவசாயப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

சிறப்பான முறையில் உள்ளீடு களைப் பயன்படுத்தும், தெரிவுசெய் யப்பட்ட ஒரு கிராம சேவகர் பிரி வில் உள்ளோருக்கே இவை இலவ சமாக வழங்கப்படவுள்ளன. (25)

### நல்லின கௌபி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்

(மீசாலை)

சாவகச்சேரி கமநல சேவை நிலைய பிரிவிற்குட்பட்ட பகுதியில் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு நல்லின கௌபி விதைகள் வழங்கப்படவுள்ளதாக விவசாயப் போதனாசிரியர் தெரிவித் தார்.

மீசாலை, அறுகம்புலம் ஆகிய இடங்களில் 20 ஹெக்ரேயர் நிலப் பரப்பில், சிறுதானியப் பயிர்கள் பயிரிடப்படவுள்ளதாகவும் விவசாயப் போதனாசிரியர் மேலும் குறிப்பிட் டார். (25)

### இந்துசமய எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

சன்மார்க்க மகா வித்தியால யத்தின் இந்து சமய எழுச்சிப் பெரு விழா, இன்று காலை 10 மணிக்குப் பாடசாலை அதிபர் து.நடராஜலிங் கம் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் விசேட சொற் பொழிவுகளும், சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையில் பட்டிமன்றமும் மற்றும் நாடகம், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் நடை பெறவுள்ளன.

### விளையாட்டு விழா

இளவாலை புனித யூதாதேயு முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று பி.ப.2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தி னராக அருட்தந்தை நிக்சன் டொறக்ஸ் அடிகளும், சிறப்பு விருந் தினராகக் கியூடெக் முன்பள்ளி இணைப்பாளர் பத்மகேசரியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### வைத்தியசாலை வாசலில் சிசு மரணம்!

சுகயீனம் காரணமாக வைத்திய சாலைக்குக் கொண்டுவரப்பட்ட ஒன் றரை மாத சிசுவொன்று, யாழ். போதனா வைத்தியசாலை வாசலி லேயே பரிதாபகரமாக உயிரிழந் தது.

இப்பரிதாபகரமான சம்பவம் நேற்றுமுன்தினம் நண்பகல் இடம் பெற்றது. சுன்னாகத்தைச் சேர்ந்த பிரணவன் என்ற சிறுகுழந்தையே இவ்வாறு மரணமானது.

### கோம்பயன் மணல் மயானப் பகுதியில் துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)

கோம்பயன் மணல் மயானப் பகுதியில் கடந்த சில நாட்களாகத் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால், அப்பகுதி ஊடாகப் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதுடன், மூக்கைப் பொத் திய வண்ணமே பயணிப்பதையும் காணமுடிகின்றது.

இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் அங்கங்கள் அப் பகுதியில் கொட்டப்படுகின்றன. இத னால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.(111)

### பிறப்புப் பதிவு புத்தகங்கள் கிடைப்பது தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை யில் பிறக்கும் குழந்தைகளின் பிறப் புப் பதிவுப் புத்தகங்களைப் பெறுவ தில் சிரமங்கள் காணப்படுவதாகப் பெற்றோர் தெரிவிக்கின்றனர். விண் ணப்பம் சமர்ப்பித்து ஒரு மாதத்திற் கும் அதிகமான காலப்பகுதி கடந் தும், பிறப்புப் பதிவுப் புத்தகங்க ளைப் பெறமுடியாது அலைய வேண்டி ஏற்படுகின்றது.

இதேவேளை - மரணமாகும் நோயாளர்களின் மரணச் சான்றிதழ் களைப் பெற்றுக்கொள்வதிலும் சிர மங்கள் காணப்படுகின்றன. (111)

### எழுச்சி விழா

(நவிண்டில்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டினை முன்னிட்டு சமரபாகு சல்லியவத்தை முத்துமாரி அம்மன் ஆலயபரிபாலன சபையினரால் எழுச்சி விழா இன்று நடாத்தப்படு கின்றது.

இவ்விழாவில் ஜெகநாதன் தற் பரன் சிறப்புரை ஆற்றுவார்.

### சமுர்த்தி வங்கி திறப்பு விழா

(காரைநகர்)

காரைநகர் சமுர்த்தி வங்கி திறப்பு விழா, இன்று பிற்பகல் 2 மணிக்கு, காரைநகர் பிரதேச செய லர் சாம்பசிவம் தலைமையில் நடை பெறவுள்ளது.

# சீதனம் வாங்கும் சமுதாயத்தில்




## சில சந்திப்புக்களும்... கருத்துக்களும்...

யாழ்ப்பாணத்தில் இன்றும் நிலவிவரும் சீதனக் கலாசாரத்தைப் பற்றி, யாழ். குடாநாட்டு மக்களில் சிலரைச் சந்தித்தபோது அவர்களிடம் இருந்து பெறப் பட்ட கருத்துக்களை இங்கே தருகிறோம்.



**நித்தியானந்தன்**
**அதிதிப் புலமையாளர்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

என்னைப் பொறுத் தவரையில் சீதனம் வாங்கிறது கூடாதது தான். இதற்கு முக்கி யமான காரணம் என்ன வென்றால், வாழ்க்கை என்பது எப்போதும் சவால்களை எதிர்கொண்டு செல்வதுதான். அநேகமானோர் மத்தியில் வாழ்க்கைக்குத் தேவையானவை இலவசமாக் கிடைக்க வேணும் என்கிற நிலைப்பாடு இப்ப தாராளமா இருக்கு.

வாழ்க்கை தொடங்கிற நேரத்தில வீடு, பணம் இலவசமாக் கிடைக்கிறது எண்டு சொல்லேக்க, அந்தத் தம்பதிகளிடையே இருக்கவேண்டிய வாழ்க்கை, சவால் இல் லாமல் போகிறது. அது வாழ்க்கையில் இருக்கிற சுவையினை மாற்றச்செய்கிறது. இருவருமே பிரச்சினைகளை எதிர்நோக்கி, அந்தப் பிரச்சினைக்குப் பொதுவான தீர்வு களைக் கண்டு வாழ்கின்றபோதுதான் வாழ்க்கை கூடியளவுக்கு வெற்றிகரமான தாகவும், பயனுடையதாகவும் இருக்கும். இங்கே அனைத்தும் இலவசமாகக் கிடைக் கின்றபோது வாழ்க்கை ஒழுங்கற்றதா கிறது.



**சின்னத்தம்பி ராஜினி**
**கரவெட்டி**

சீதனம் வாங்கத் தான் வேணும். அதற் காக ஆசைப்பட்டு நிறைய வாங்காமல் அளவாகப் பெண் வீட்டாரின் வசதி யைப் பொறுத்து வாங் கலாம்.

படித்த மாப்பிளை வேணும் எண்டு எடுக்கேக்க, சீதனத்தை அவர்கள் எதிர் பார்ப்பதுல் தவறு என்று நான் சொல்லேல்ல. ஏனெண்டால், அவரைப் படிப்பித்த செலவு களை ஈடுசெய்ய வேண்டுமெண்டால் சீத னம் வாங்கத்தான் வேணும். அதைவிட குடும்பத்தில இன்னும் சகோதரிமார் இருந் தாலும் சீதனம் வாங்கத்தான் வேணும்.

சீதனம் வாங்கினால் அது ஒரு பிற்கால முதலீடாகவும் இருக்கும் எண்டு நினைக் கிறன். சீதனம் நிறையக் குடுக்கிறதாலும் பிரச்சினை இருக்கு. அதால சமூகத்தில காசுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக் கினம் வாழ்க்கை அன்பு, புரிந்துணர்வு அற்றநிலைக்குக் கொண்டுபோய்விடும்.

பெண் வீட்டாரும்- நாங்கள் நிறையச் சீதனம் கொடுக்கணுங்கள்தானே என்று

சிருக்க விரும்புவினம். அதால தற்போது விவாகரத்துகள்தான் கூடுதலாக நடந்து கொண்டிருக்கு. அதைப் பார்க்கேக்க சீத னத்தை அளவோடு கொடுத்து, அன்பாக வாழலாம் எண்டு நினைக்கிறன்.

**வீ.பி.சிவநாதன்**
**பொருளியற்துறைத் தலைவர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்**

மேற்கு நாடுகளைப்போல இல்லாம எங்கட ஆககளைச் சீதனம் சோம்பேறியாக்கி வைச்சிருக்கு. இலவசமாகவே எல்லாத்தையும் பெறலாம் என்கின்ற ஒரு தன்மை காணப் படுகிறது.



இதேவேளை, பெண் பிள்ளையைப் பெற்றவை கடுமையா உழைக்கி னம். சீதனம் கொடுக்க வேண்டும் எண்ட கடப் பாட்டில், சீதனம் இருந் தால் தான் கலியாணம் எண்ட சந்தையில பெண்ணை விற்கமுடியும் என்று கருதுகிற ஆக்களும் இருக்கிறார்கள்.

**சின்னத்தங்கச்சி**
**யாழ்ப்பாணம்.**

சீதனம் என்பது கேட்டுவாங்கிற ஒண் டில்லை. பொம்பிளை பகுதி விரும்பினா- கண வனுக்கு ஒரு இடைஞ் சல் வந்தால் அல்லது கஷ்டமான குடும்பத் தில ஏதேனும் ஒன்று வந்தால் அதனைக் காவாந்து பண்ணுறதுக் குப் பெண்ணுக்குக் கொடுக்கிற சீர்வரிசை. அதை டிமான்ற் பண்ணி வாங்கிறது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் அல்ல.



**அம்பிகைபாகன் அசோக்**
**நல்லூர்**

காதலித்துத் திருமணம் செய்கிற எவரும் சீதனம் வாங்கக்கூடாது என்பதுதான் என்னுடைய குறிக்கோள். Love பண்ணினால் அந்தப் பெண்ணிடமி ருந்து பொருளாதார வளங்கள் எதையும் எதிர்பார்க்கக் கூடாது. அந்தப் பிள்ளையை மட் டுந்தான் சீதனமாக எதிர் பார்க்கவேணும்.



புரிந்துணர்வோடு காதலை வெளிப்படுத் தும்போது, சீதனம் எப்ப வும் தடையாக இருக்கக்கூடாது. எந்த எதிர்பார்ப்பும் இருக்கக்கூடாது. பெற்றோர் நிச்சயிக்கிற திருமணங்களுக்குச் சீதனம்

தலைதூக்கியிருக்குத்தான்.

நான் ஒரு தனியார் கம்பனியில் வேலை பார்க்கிறன். எனக்கு சீதனம் வாங்கித்தான் கலியாணம் செய்யவேண்டும் என்கிற ஆசையோ, எதிர்பார்ப்போ எள்ளளவும் இல்லை.

எங்கட குடும்பம் வசதியான குடும்பம் என்றில்லை. அதேநேரம் வறுமையான குடும் பம் எண்டும் இல்லை. அதால, நான் உழைத்து ஒரு முதலீட்டை நானே உருவாக் கிக்கொண்டு, அதிலிருந்துதான் என்ர வாழ்க் கையை ஆரம்பிப்பன். சீதனம் எதிர்பார்க்க மாட்டன்.

**ஞானேஸ்வரி**
**ஆத்திசூடி வீதி**
**யாழ்ப்பாணம்**

சீதனமில்லாம ஒரு பொம்பிள எடுக் கிறவன் நல்லவன். உலகத்தில இப்படி வாழ்ந்து காட்டினா மற்றவையளுக்கும் நல்ல மெண்டு சொல்லுறன். சீதனம் வேண்டி ஒரு பொம்பிளையிட்ட அடிமையா வாழக்கூடாது. ஒரு பொம்பிளையிட்ட 10,15 இலட்சம் எண்டெல்லாம் வாங்கிறீங்கள். அதெல் லாம் என்னத்துக்காக வாங்கிறீங்கள். இப்படி சீதனம் வாங்கிறதால இண்டைக்கும் பல பொம்பிளயள் 35, 40 வயதுகளைத் தாண்டி ஏன் இருக்கினம். ஏன்னெண்டால்



கேட்கப்பட்ட சீதனம் இல்லை. அப்பிடிப் பாக்கேக்க என்னைப் பொறுத்தளவில நான் சொல்லுறன் மனிதனை மனிதன் தான் வாழவைக்க வேணும். ஆனால், தற்போது இந்த நாட் டில் நடக்கிற நில மையின்படி ஆணை விலைபேசிப் பெண் எடுக்கிறம். எத்தின இலட்சத்தைப் பொம் பிளை கொடுத்தாலும் அது அவனுக்கு கொடுக்கிற விலைதான் அது. அதால அந்த றாங்கியை திருப்பிக் காட்டுவம். மனிதனை மனிதன் விலை பேசி வாங்கின படியால் அங்க உண்மையான அன்பில் லாமல் - கோடு, கச்சேரி எல்லாம் போக வேண்டியநிலை இருக்கிறது.

**சந்திப்பு**
**உஷா, கலாநந்தி**

**இதுதொடர்பாக உங்கள் மேலதிக கருத்துக்களையும், விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.**

**அனுப்பவேண்டிய முகவரி -**
**"சிநேகிதியே",**
**நமது ஈழநாடு**
**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

## தலைவி நீ தலை நிமிர்...!

நாம் எமது இலக்கை நோக்கிச் செயற்படும்போது, அதில் முன்னேற்றம் காண்பதாகக் கருதிக்கொண்டாலும், சில சமயம் போதியளவு முன்னேறாது இருக்கக்கூடும். இதை நாம் அடிக்கடி கணிப்பீடு செய்து, எவ்வளவு முன்னேறி யிருக்கின்றோம் என அறிந்து கொள்வது அவசியம்.

உதாரணமாக- உனது வீட்டு வரவு- செலவை நீ திட்டமிட்டு நடத்துகிறாய். உனது அதிகப்படியான செலவு என நீ எதிர்பார்த்த தொகையைவிட, செலவு அதிகரித்துள்ளதா? குறைந்துள்ளதா? என நீ கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். செலவு அதிகரித்திருந்தால் அதற்கான காரணத்தை ஆராயவேண்டும். குறைந்திருந்தாலும் அவ்வாறே.

பின்னர், செலவைக் குறைக்க என்ன செய்யலாமென ஆலோசிக்க வேண்டும். அதிகரித்த செலவு அத்தியாவசியச் செலவாக இருந்தால், வருவாயை அதிகரிக்க வழி காணவேண்டும்.

அதிகப்படியான செலவை ஈடுசெய்ய வருவாய் பெறுவதற்காக ஆடு வளர்த்திருந் தீர்களானால், அதன் மூலமாக எதிர்பார்த்த வருவாய் கிடைத்துள்ளதா எனக் கவனிக்க வேண்டும். குறைவாக இருக்குமானால் அல்லது வேறு அவசியச் செலவுகள் இருக்குமாயின் - வருவாயை அதிகரிக்க வேறு என்ன செய்யலாம் என ஆலோசித்து குறைகின்ற தொகையை ஈடுசெய்யக்கூடிய ஒரு வருமானத்தைப்பெற ஆவன செய்ய வேண்டும்.

ஒருபிள்ளை கல்வியில் ஓர் இலக்கை எட்டச்செய்ய வேண்டுமென முயன்றீர் களானால், அந்தப் பிள்ளை கல்வியில் போதியளவு முன்னேறியுள்ளாரா? ஆர்வமுடன் கற்கின்றாரா? என்பதை அடிக்கடி அக்கறையுடன் கவனிக்கவேண்டும். கற்பிக்கும் ஆசிரியரிடமும் இது பற்றி விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம்.

இதேபோன்றே காரி யாலயம், தொழில் ஸ்தா பனம், நிறுவனம் என்பன வற்றிலும் போட்ட திட்



கினம் வாழ்க்கை அன்பு, புரிந்துணர்வு அற்றநிலைக்குக் கொண்டுபோய்விடும்.

பெண் வீட்டாரும்- நாங்கள் நிறையச் சீதனம் கொடுத்தனாங்கள்தானே என்று ஆண்களை ஒரு அடிமை மாதிரி வைச்

தும்போது, சீதனம் எப்ப வும் தடையாக இருக்கக்கூடாது. எந்த எதிர்பார்ப்பும் இருக்கக்கூடாது. பெற்றோர் நிச்சயிக்கிற திருமணங்களுக்குச் சீதனம் வாங்கிற ஒரு கலாசாரம் யாழ்ப்பாணத்தில

# பொட்டு வைப்பதன் மகிமை

தமிழ்ப் பெண்களை இனங்காட்டும் ஒரு விடயமாக நெற்றிப் பொட்டுத் திகழ்கிறது. ஆனால், தற்சமயம் பொட்டு வைப்பது சிலருக்கு அநாகரிகம் என்றாகிவிட்டது.

இதற்கு இரண்டு காரணங்கள்- ஒன்று சூழ்நிலை. தமிழ் என்று காட்டிக்கொண்டால் பிரச்சினை வருமோ என்றநிலை. மற்றையது நாகரிகம்.



எது எப்படி இருப்பினும் இந்த பொட்டு ·வைப் பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

தொடுகை வைத்தியத்தைப் பற்றிக் கேள் விப்பட்டிருப்பீர்கள். இந்த வைத்தியமுறை பல ரையும் ஆச்சரியப்பட வைப்பது உண்மை.

உண்மையில் இந்த வைத்தியத்தின் தத்துவம் யாதெனில் - எமது உடம்பிலுள்ள நரம்பு முடிச்சு களை உணர்ந்து, அதைத் தொட்டுத் தூண்டி விடுவதாகும். இந்த முடிச்சுகளைச் 'சக்கரம்' என்றும் குறிப்பிடுவர்.


அதேபோலத்தான், இரு புருவங்களுக்கு மத்தி யில் சற்று மேலே ஆஞ்ஞை என்ற சக்கரம் உள் ளது. அந்த இடத்தில் பொட்டு அல்லது வீபூதி வைக்கும்போது ஓர் அழுத்தம் ஏற்படுகிறது. அந்தச் சக்கரத்தில் பிட்யூட்டரி என்ற சுரப்பி சுரக்கிறது.

பொட்டு வைப்பதால் அழுத்தம் பெற்ற சுரப்பியால் அறிவும், மனவுறுதியும் ஏற்படுகிறது.

எனவே, சாதாரணமாக நாங்கள் வைக்கின்ற இந்தப் பொட்டில் இத்தனை அம்சங்கள் அடங்கியிருக்கிறதல்லவா?

பொட்டு வைக்கத் தயங்குபவர்களே... இனியாவது பொட்டு வைக்கத் தவறாதீர்கள்!

இதேபோன்றே கா யாலயம், தொழில் ஸ்தா பனம், நிறுவனம் என்பன வற்றிலும் போட்ட திட் டங்களின் இலக்குகளை எந்தளவு அடையமுடிந் தது எனப் பார்த்து ஒப் பீடு செய்யவேண்டும்.



ஒரு ஆடை தயாரிப்பு நிலையத்தில் மாதம் 5000 உடைகள் தயாரிப்ப தாகத் திட்டமிட்டிருந்தால் ஒவ்வொரு மாத இறுதியி லும் எவ்வளவு உடைகள் தயாரிக்கப்பட்டுள்ளன என ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அவ்வாறு தயாரிக்கப்படாவிட்டால், காரணத்தைக் கண்டுபிடித்துத் தவறை நிவர்த்தி செய்து திட்டமிட்டபடி உடைகளைத் தயாரிக்க வேண்டும்.

இவ்வாறு திட்டத்தையும், உண்மை நிலையையும் ஒப்புநோக்காதுவிடின் - நாம் நடைமுறையில் விடும் தவறுகளும், பின்னடைவுகளும் கண்டுபிடிக்கப்படாது போய்விடும். அதேபோல, நமது திட்டத்திலுள்ள தவறுகளும் எமக்குத் தெரியாது போய்விடும்.

இலக்கை அடைவதற்காக வகுத்ததிட்டம், அதைச் செயற்படுத்துவோர் செயற்பாடு, அதன் பலாபலன்கள் ஆகிய அனைத்து விடயங்களிலும் மிகுந்த கவனம் செலுத்தி, வழிநடத்திச் சென்று, இலக்கை அடைவதிலேயே ஒரு தலைவியின் வெற்றி தங்கியுள்ளது.

தலைமையேற்று நடத்தும் ஒருவர் கொண்டிருக்கவேண்டிய பண்புகளும், அறிந்திருக்க வேண்டிய விடயங்களும் முழுமையாகக் கைவரப் பெற்ற ஒரு பெண்ணுக் குத் தலைவியாக இயங்குவதில் வேறு சில இடர்பாடுகளும் எதிர்ப்படுவது நம்மைப் பொறுத்தவரை இயல்பாகிவிட்டது. இவைகளை எதிர்கொள்ள வேண்டியதும் ஒரு பெண் அதிகப்படியாகப் பெற்றிருக்க வேண்டிய திறமையாகவுள்ளது. ஏனைய பண்புகளிருந்தாலும் இந்தத் திறமை மட்டும் சூழ்நிலையாலோ, வளரும்போது பெற்ற இயல்பான பண்புகளாலோ, வேறு காரணத்தினாலோ அவளிடமில்லாது போனால் அவள் வெற்றிபெற இயலாதவளாகின்றாள். அந்தநிலை மாறவேண்டும்.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

# ஒரு பூவின் பயணம்

சின்னஞ்சிறு கிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே - உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்.
பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே
அள்ளி யணைத்திடவே - என்முன்னே
ஆடிவருந் தேனே.

*-மகாகவி பாரதி.*

குழந்தைச் செல்வத்தின் மகத்துவம் தெள்ளுதமிழ்த் தேனாக வழிகிறது. வாழ்க்கை சீர்பெற வந்திருக்கிறாள் குட்டித் தேவதை. அவள் பிஞ்சுப் பாதங்கள் படிகின்ற இடமெல்லாம் சந்தோஷம், கலகலப்பு. அவள் சொல்லும் மழலைமொழி சோர்வை விரட்டுகிறது. அவளது முல்லைச் சிரிப்பு மனதிற்கு நிம்மதி தருகிறது. வீட்டின் விலைமதிக்க முடியாத செல்வம் அவள். உண்மை இது.

இதற்கு மாறுபட்ட நிலையிலும் குழந்தைகள் வளர்கின்றன. வறுமை தாண்டவமாடும் ஒரு குடும்பத்துக் குழந்தை - தன்வீட்டின் பொருளாதார நெருக்கடியைத் தானும் தாங்கிக் கொள்கிறது. இக்குடும்பங்களில் ஆண் குழந்தையாக இருந்தால் கொஞ்சம் வளரத் தந்தைக்குக் கையுதவியாக இருப்பான் என்று எண்ணம் மேலோங்கியிருக்கும். வாழ்விட, உணவு, பாதுகாப்புத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாதவிடத்து, வீட்டில் குழந்தைகளை ரசிக்கும்நிலை இருக்காது. அவ்வாறான சூழ்நிலைகளில் பெண் குழந்தைகளும், ஆண் குழந்தைகளும் வேண்டாத விருந்தாளியாகவே உள்ளனர்.

இந்நிலைக்கு மேலாகப் பெண் என்றரீதியில் பெண் குழந்தைக்குரிய காப்பு - ஆண்குழந்தைகளைவிட அதிகமாகவே வேண்டப்படுகின்றது. நான்கு, ஐந்து வயதுகளிலேயே குழந்தைகள் முறைகேடான உறவுகளில் ஈடுபடுத்தப்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. குழந்தைகளின் மீது பிரயோகிக்கப்படும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகமானது

## கறைபடிந்த கரங்களுள்ளே...

அப்பிள்ளைகளின் முழுவாழ்வையும் அழித்தொழித்துவிடும். மிகக் கொடூரமான வன்முறை இதுவாகும். குழந்தைகள், சிறுவர் மீதான துஷ்பிரயோகம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.


கடந்த பத்தாண்டுக் காலப்பகுதியில் இந்த அதிகரிப்பில் சடுதியான உயர்ச்சி காணப்படுகிறது. இதனால், குழந்தைகள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள். பின்னாளில் மனவளர்ச்சி குன்றியவர்களாக, ஒதுங்கியிருப்பவர்களாக, உடல் பாதிப்புக்குள்ளானவர்களாக ஆக்கப்படுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் படிப்படியாக மரணத்தினுள் தள்ளப்படுகின்றார்கள்.

**அத்தியாயம் 05**

குழந்தைகளை இத்தகைய வன்முறைகளிலிருந்து பாதுகாத்தல் உண்மையிலேயே சமூகத்திற்கு- சமூக அங்கத்தவர்களால் விடப்பட்ட மாபெரும் சவாலாகும். குழந்தைகளின் அறிவியல் முதிர்ச்சியற்ற பருவம் - அவர்கள் தங்களைத் தாங்கள் பாதுகாக்கத் தகைமையற்றவர்களாக ஆக்குகின்றது.

துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் நெருங்கிய உறவினர்களாக இருக்கும் சந்தர்ப்பங்களில், இவ்வன்முறை தொடர்வதற்குரிய வாய்ப்புக்கள் உண்டு. குழந்தைகள் இயல்பாக மென்மையான உள்ளம் படைத்தவர்கள். எனவே, துஷ்பிரயோகத்துக்கு ஆளாகும் குழந்தை அச்சுறுத்தல்களுக்குப் பயந்தும் தான் பாதிக்கப்படுவதை

கஷ்டங்களை நான் சுமக்க
சுகங்களை நீ பெருக்கினாய்
உனது 'வதை' ஆலையில்
என் வாழ்க்கை
சக்கை பிழியப்பட்டு வருகிறது.
உயிருள்ள தோளில்
ஓர் மாலையாகக்
கிடக்க நினைத்தேன்
கடைசியில் என்னை
பிணத்தின் கால்களில்
மலர் வளையமாகச்
சாத்திவிட்டாய்.



ஒரு குழந்தையை அல்லது சிறுவரைத் துஷ்பிரயோகம் பண்ணுதலானது - ஒரு அழகான மலரைக் கால்களுள் போட்டுத் துவம்சம் செய்துவிடுவதாகும். மீளமுடியாத இருளுக்குள் பிள்ளைகளை வலிந்து தள்ளிவிடுதலாகும்.

ஒருநாள், ஒரு கிராமத்துத் தெரு. நீண்ட வெறிச்சோடிய பாதை. வீதியின் ஓரமாக நடந்து கொண்டிருக்கிறாள் ஒரு சின்னஞ்சிறுமி. கைகளில் ஒரு இறாத்தல் பாண். கண்களில் மிதமிஞ்சிய வெருட்சி, பயம். மிஞ்சிப்போனால் 6 அல்லது 7 வயதான தோற்றம். வீதி யோரமாக இரு உயர்தரவகுப்பு மாணவர்கள். அவர்களைப் பயந்து பயந்து பார்த்தபடி நடக்கின்ற சிறுமியை வியப்போடு பார்த்தேன்.

வறுமையைப் பறைசாற்றுகின்ற மெலிந்த தோற்றமுடைய சிறுமியே அவள். அவ்விளைஞர்களைக் கடந்ததும் ஒருமுறை திரும்பி அவர்களைப் பார்த்தாள். பிறகு ஓரேஓட்டம். திரும்பிப் பார்க்காத ஓட்டம். அந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் அச்சிறு பெண்ணைக் கவனித்திருக்கவேயில்லை. இது மிகைப்படுத்தப்பட்ட செய்தியல்ல, உண்மை. நீண்ட வழித்தூரத்தின்போது பெற்றோரால் வழங்கப்படுகின்ற பாதுகாப்புக் கருதிய செய்திகள் குழந்தைகளை எந்நேரமும் பயந்தபடி வாழச் செய்கின்றன. அவர்களின் மென்மையான மனங்களில் தேவையற்ற சந்தேகங்களைக் கிளைக்க வைக்கின்றன. அவர்களின் இயல்பான புதிது காணுந் தன்மையை, வயதுக்குரிய உற்சாகத்தை இழக்க வைக்கின்றன.

யாழ்ப்பாண சமூகமானது இவ்வாறான முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபடும் "பெரிய" மனிதர்களை விமர்சிப்பதில்லை. சமூகத்தில் பிரபல்யமானவர்கள் மத்தியில் இதேவகையான சீர்கேடுகள் காணப்படினும், அவர்கள் ஊருக்கு நல்லவர்களாகவே போற்றப்படுகிறார்கள். இரட்டை வேடமிடும் இத்தகைய மனிதர்கள் இலகுவாக மன்னிக்கப்படுகிறார்கள். ஆனால், பாலியல் சீர்கேட்டுக்கு ஆளாகும் பெண்பிள்ளை இரங்கத்தக்கநிலையில் நோக்கப்படுவதைவிட, அவள் சமூக விமர்சனங்களால் சுக்குநூறாகக் கிழிக்கப்படுவதை அவதானிக்கலாம். அவளது வாழ்க்கைவீச்சு முழுவதும் அவ்விடயம் பற்றிய கேள்விகள் எழுந்துகொண்டே இருக்கும். ஏனெனில், மனவடுக்கள் நிறைந்த மனிதர்களுக்கு இங்கு குறைவேயில்லை. குழந்தைப் பருவத்தில் அவளது வாழ்வைச் சிதைக்கின்ற சமூகம், அதிலிருந்து அவள் மீள்வதற்கு ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

என் உலகத்தை
இருளாக்கியவர்கள்
என்தேச மின்மினிப் புச்சிகளையாவது
விட்டு வைத்திருந்திருக்கலாம்
என் கால்களைக்
கட்டிப் போட்டவர்கள்
என் பாதத்தின் பாதைகளில்
முட்களையாவது
கொட்டாமல் 'இருந்திருக்கலாம்.

ரிஸ்னாவின் இக்கவிதையிலுள்ள துயரம் மென்மையான நெஞ்சங்களை முள்ளாகக் குத்தவைக்கும் சின்னஞ் சிறுமியின் ஏக்கமில்லையா? இந்த ஏக்கம் படராமல் உங்கள் இனிய மகள் நடக்கவேண்டாமா?

(பயணம் தொடரும்)

ச.சாரங்கா

# சுவாசத் தொகுதித் தொற்றும் குழந்தைகள் பராமரிப்பும்

சுவாசத்தொற்றுள்ள அநேகமான பிள்ளைகளுக்கு வீட்டில் தாயின் பராமரிப்பே நோயைக் குணமாக்குவதில் முக்கியமான அம்சம். வீட்டுப்பராமரிப்பில் பின்வரும் விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

- பிள்ளையின் நிறை குறையாமல் பாதுகாக்கப் பிள்ளைக்கு உகந்த ஆகாரத்தைக் கொடுக்கவேண்டும். நிறை குறைந்தால் போஷாக்கின்மை ஏற்படும். 4 மாதத்திற்கு மேற்பட்ட பிள்ளைக்குத் தானிய வகைகள் (சோறு, பாண், இடியப்பம்), பருப்பு, மீன், இறைச்சி ஆகியவற்றை அடிக்கடி பிள்ளை



தொடர்வதற்குரிய வாய்ப்புகள் உண்டு. குழந்தைகள் இயல்பாக மென்மையான உள்ளம் படைத்தவர்கள். எனவே, துஷ்பிரயோகத்துக்கு ஆளாகும் குழந்தை அச்சுறுத்தல்களுக்குப் பயந்தும் தான் பாதிக்கப்படுவதை மறைக்க முயற்சிக்கலாம்.

இத்தகைய நெருக்கடிக்குத் தீர்வாக ஐந்து, ஆறு வயதுகள் தொடக்கம் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய அறிவைக் குழந்தைகளுக்கு வழங்கமுடியும். யாழ்ப்பாண சமூகத்தின் மரபுக் கட்டமைப்பினுள் புகமுடியாத விடயங்களில் ஒன்றாகவே 'சிறுவர்களுக்கான பாலியற்கல்வி' இருந்து வருகிறது. மேலும், அறியாப்பருவத்தில் அச்சுறுத்தும் விதத்தில் அறிமுகமாக்கப்படும் பாலியல் துஷ்பிரயோகங்கள் பற்றிய செய்தி குழந்தைகளின் சந்தோஷமான வாழ்வில் ஒரு கீறலாகவே அமையும். பெற்றோர்கள் தம் குழந்தைகளிடம் இதனைச் சொல்லத் தயங்குகிறார்கள். ஆசிரியர்கள் ஒரு வரையறைக்கு மேல் மாணவர்களின் தனிப்பாதுகாப்பில் ஈடுபடுவதில்லை. எனவே, இப்பருவம் மிக ஆபத்துக்குரியதாக இருக்கின்றது.

இவ்வன்முறை வடிவங்கள் எமது சமூகத்தில் மறைக்கப்பட்டுள்ளனவே தவிர, இவை நிகழ்ந்து கொண்டு தானிருக்கின்றன. சில பொழுதுகளில் பத்திரிகைச் செய்திகளாக இவற்றைக் காணமுடியும். ஆனால், பெரும்பாலான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள்- பாதிக்கப்பட்டவர்களால் திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன. இது குற்றவாளிகள் தப்பிக்கொள்ள வழிசெய்வதோடு, இத்தகைய குற்றச்செயலின் அதிகரிப்புக்கு வழிசெய்கின்றது. பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களால் இவ்விடயங்கள் வெளிக்கொண்டு வரப்படும்போது, அது அவர்களின் குடும்பக் கௌரவத்தைப் பாதிக்கின்றது. அத்துடன், பின்னாளில் அப்பிள்ளைகளின் நல்வாழ்வைப் பாதிக்கிறது. சமூக தர்மஸ்தாபனங்களில் இவை நிகழின் - அந்நிறுவனக் கட்டமைப்புக்களைச் சமூகத்தில் கீழ்நிலைக்குத் தள்ளிவிடுகின்றன. இந்நிலைமை சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் அதிகரிக்கக் காரணமாகின்றது.

'துஷ்பிரயோகம்' என்ற தலைப்பிலான அனாரின் கவிதையின் சில வரிகள் இக்கொடுமையைப் பேசுகின்றது.

போஷாக்கின்மை ஏற்படும். 4 மாதத்திற்கு மேற்பட்ட பிள்ளைக்குத் தானிய வகைகள் (சோறு, பாண், இடியப்பம்), பருப்பு, மீன், இறைச்சி ஆகியவற்றை அடிக்கடி பிள்ளை வேண்டிய நேரமெல்லாம் கொடுக்கவும். பால், முட்டை, தயிர் ஆகியன இருந்தால் இவற்றுடன் வாழைப்பழம், பப்பாசிப்பழம் ஆகியவற்றையும் கொடுக்கலாம். தாய்ப்பால் மட்டும் குடிக்கும் பிள்ளைக்கு அடிக்கடி பாலூட்டவேண்டும்.

- நோய் குணமாகிய பின், உணவின் அளவுகளை அதிகரிக்கவும். ஒரு கிழமைக்கு மேலதிக ஆகாரம் (ஒருவேளை) கொடுக்கவும். சாதாரண நிறை ஏற்படும்வரை இந்த மேலதிக ஆகாரவேளையிலும் உணவூட்டவும். இதனால், பிள்ளைக்குப் போஷாக்கின்மை ஏற்படுவதைத் தடுக்கலாம்.
- பிள்ளை மூக்கு அடைப்பினால் உணவு உட்கொள்வதில் கஷ்டம் ஏற்பட்டால், மூக்கினுள் உப்புக்கலந்த நீர்த்துளிகளை விட்டு, சளியை இளக்க வைக்கவும். ஒரு பருத்தித்துணியை உருட்டித் தயாரிக்கப்பட்ட திரியை, உப்பு நீரில் நனைத்து மூக்குத் துவாரங்களினுள் புகுத்தி மூக்கைச் சுத்தம் செய்யலாம்.
- அதிகளவு பானங்களைக் குடிக்கக் கொடுக்கவும். சுவாசத் தொற்றுள்ள பிள்ளை அதிகளவு நீரை இழக்கின்றது. முக்கியமாகக் காய்ச்சலுள்ள பிள்ளைக்குத் தாய்ப்பால், நீர், பழச்சாறு, கஞ்சி ஆகியவற்றைக் கொடுக்கலாம்.
- நியுமோனியாவின் அறிகுறிகள் தென்படுகின்றனவா எனப் பிள்ளையை அவதானிக்கவும்.

### அறிகுறிகள்

- சுவாசிக்கச் சிரமப்படுதல்.
- சுவாச வேகம் அதிகரித்தல்.
- பானங்களைக் குடிக்க முடியாமை.
- பிள்ளை அதிக சோர்வடைதல்.

இருமல், சிரமமான சுவாசம் ஆகியன குறித்து தாய்மார்கள் கவனத்தில் கொள்ளவேண்டியவை.

01. இருமலினால் பீடிக்கப்பட்ட அநேகமான குழந்தைகளுக்கு நுண்ணுயிர்க் கொல்லிகளோ வேறெந்த விசேட மருந்துகளோ தேவையில்லை. அதேபோல், காய்ச்சல் உள்ள பிள்ளைகள் அனைவருக்கும் நுண்ணுயிர்க் கொல்லிகள் அல்லது வேறு விசேட மருந்துகள் தேவையில்லை. உடலில்



தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நடைபெறும் மாற்றங்களினால் ஏற்படுவதே காய்ச்சல். ஆகையால், கண்டு பயப்படத் தேவையில்லை.

02. அதிகரித்த சுவாச வேகம் அல்லது சுவாசத்தின் போது நெஞ்சின் கீழ்ப்பாகம் உட்புறமாக இழுக்கப்பட்டால், குழந்தையை வைத்திய ஆலோசனை பெறுவதற்காக ஒரு வைத்தியரிடம் கொண்டு செல்ல வேண்டும். இந்த இரு அறிகுறிகளையும் குழந்தையில் எவ்வாறு அவதானிக்கலாம் எனத் தாய் அறிந்திருக்க வேண்டும்.

03. தடுப்பு மருந்துகளைக் கொடுப்பதன் மூலம் இருமலை உண்டாக்கக்கூடிய 4 நோய்களைத் தடுக்கலாம். அவையாவன குக்கல், சின்னமுத்து, தொண்டைக் கரப்பான், கசரோகம்.

வீட்டுப்பராமரிப்புக் குறித்துத் தாய் செய்யவேண்டியவை

குழந்தை சாதாரணமாக உட்கொள்ளும் ஆகாரங்களை ஊட்டவும்.

தாகத்தைத் தீர்ப்பதற்காகப் போதியளவு நீர் அல்லது பானங்கள் கொடுக்கவும்.

நிலைமை மோசமடைகின்றதா என்பதை அவதானித்து, உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லவும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல். - திருக்குறள்

## நமது நோக்கு

### அமைதிவழியில் அர்ப்பணிப்பும் சர்வதேசத்தின் பொறுப்பும் !

வன்னிக்கு விஜயம் செய்து - தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷியிடம், சமாதானம் பற்றிய தம் தரப்பின் தெளிவான நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் உறுதிபட எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்.

'கடந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களிலும் எட்டப்பட்ட முடிவுகளை, இதுவரை நடைமுறைப்படுத்தாத நிலையில், தொடர்ந்து பேச்சுக்களில் பங்குபற்றுவது அர்த்தமற்ற செயலாகும். இதனாலேயே இணக்கம் காணப்பட்ட விடயங்களை அரசு அமுல்செய்வதற்கு அவகாசம் கொடுத்து, விடுதலைப் புலிகள் பேச்சுக்களிலிருந்து சிறிது காலத்திற்கு ஒதுங்கிநிற்க முடிவு செய்துள்ளனர். அரசு, தான் வழங்கிய உறுதிமொழிகளை அமுல்செய்தால், பேச்சுக்களில் புலிகள் தொடர்ந்து பங்குபற்றுவதைப் பரிசீலிக்கலாம்' எனத் தலைவர் பிரபாகரன் - தம்மைச் சந்தித்த ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷியிடம் எடுத்துரைத்திருந்தார்.

தலைவர் பிரபாகரன் வலியுறுத்திச் சொல்லிய இந்த நிலைப்பாடு தனியே யசுசி அகாஷிக்கு மட்டுமென்றல்ல, சமாதான முயற்சிகளில் ஆர்வம் காட்டும் சர்வதேச சமூகத்திற்கு, விடுதலைப் புலிகள் சார்பில் எடுத்துக் கூறப்பட்ட தெளிவான நிலைப்பாடு என்றே கொள்ளமுடியும்.

சமாதான முயற்சிகள் ஆரம்பித்தது தொட்டு - அரசாங்கம் தந்த உறுதிமொழிகள், எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் என்பவை - வெறுமனே பேச்சளவிலும், அறிவிப்புக்களாகவும் இருக்கின்றனவேயொழிய - நடைமுறைச் சாத்தியமானதாக அவை முன்னெடுக்கப்படவில்லை என்ற விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டிலுள்ள நியாயத்தைச் சர்வதேசம் இதன் மூலம் விளங்கிக்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

முன்னைய இலங்கை அரசாங்கங்கள், தமிழர் தரப்புக்கு வாக்குறுதிகளைத் தந்தும், ஒப்பந்தங்களைச் செய்தும் - பின்னர் ஏமாற்றியதுபோன்று - தாமும் ஏமாற்றப்படத் தயாரில்லை என்ற செய்தியையும் தலைவர் பிரபாகரன் அகாஷியூடாகச் சர்வதேசத்திற்குச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

பேச்சுக்களிலிருந்து இடைவிலகுவது என்பது - ஒன்றும் திடீரென மேற்கொள்ளப்பட்ட முடிவல்ல என்பதையும், கடந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களிலும் தரப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாததையடுத்தே - இனிமேலும் அவ்வாறான சூழலில் பேச்சுக்களைத் தொடர்வதில் அர்த்தமில்லை என்ற நிலையிலேயே புலிகள் இந்த முடிவுக்கு வரநேரிட்டது என்பதையும் தலைவர் பிரபா அகாஷிக்கு விளக்கியிருக்கிறார்.

இந்தவகையில் - இனிச் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதற்கு ஏற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கமே என்பது, சர்வதேசத்திற்கும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருப்பதானது - சமாதானத்தை நோக்கிய நகர்வை நியாயபூர்வமாகவும், துரிதப்படுத்துவதாகவுமே அமையும் என்பதைப் புலிகள் தரப்பின் நிலைப்பாட்டின் மூலம் சர்வதேசம் விளங்கிக் கொள்ளுமாயின் - விரைவான, ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்திற்குச் சர்வதேசம் அழுத்தம் தருமாயின் - சமாதான முயற்சிகளை சுமுகமாக முன்னகர்த்திச் செல்ல சந்தர்ப்பங்கள் வாய்க்கமுடியும்.

# வொஷிங்ரனில் அரசு சமர்ப்பித்த ஆவணம்

# தமிழருக்கான பாதிப்பைச் சொல்லவில்லை!

## அமெரிக்கத் தொழிற்சங்கம் நடாத்திய மாநாட்டில் மகாசிவம்

(கொழும்பு)

ரோக்கியோ உதவிவழங்கும் மாநாட்டில் இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்படவுள்ள " இலங்கையை மீளச் சிறப்படையச் செய்தல்" என்ற ஆவணம் இலங்கை அரசின் முன்னுக்குப்பின் முரணான கொள்கையின் ஒரு வெளிப்பாடே - என்று அமெரிக்கத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பிற்கான .மத்திய நிலையம் திருமலையில் நடாத்திய " இலங்கையின் சமாதானம் மற்றும் அபிவிருத்தியில் தொழிற்சங்கங்களின் வகிபங்கு" என்ற தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கில் உரையாற்றிய இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் பொதுச்செயலாளர் மகாசிவம் கூறினார்.

திருகோணமலையில் "நியூ சில்வர் ஸ்ரார்" விடுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இக்கருத்தரங்கில் அமெரிக்கத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பிற்கான மத்திய நிலையத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வில்லியம் கொங்கிளின் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து உரையாற்றிய மகாசிவம், இன்று உங்களுக்கு இரண்டு ஆவணங்கள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று வடக்கு - கிழக்கு மாகாண அவசர மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான நிலையமான 'சிறான்' சமர்ப்பித்துள்ள அறிக்கையாகும். இவ்வறிக்கை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஐ.நா அமைப்புக்களுக்கான அபிவிருத்திக்கான நிதியம், யுனிசெப் அமைப்புக்களும், இலங்கை மத்திய அரசு, வடக்கு-கிழக்கு மாகாண அரசு ஆகியனவும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து தயாரித்த "வடக்கு - கிழக்கை எவ்வாறு மீண்டும் கட்டியெழுப்புவது" என்பது தொடர்பான முழுமையான ஆவணமாகும்.

ரோக்கியோ மாநாட்டிற்கு முன்பதாகக் கடந்தவாரம் வொஷிங்ரனில் கூட்டப்பட்ட உதவிவழங்கும் நாடுகளின் முன் ஏற்பாட்டு மாநாட்டில்- வடக்கு-கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கு எனவும், ரோக்கியோ மாநாட்டில் சமர்ப்பித்து நிதிபெறுவதற்கு எனவும் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணம் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக இலங்கை அரசினால் தயாரிக்கப்பட்ட வேறொரு ஆவணம் அங்கு சமர்ப்பிக்கப்பட்டது.

வொஷிங்ரன் மாநாட்டில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பங்குபற்றுவது தடுக்கப்பட்டது. புலிகளின் பிரதிநிதிகள் அம்மாநாட்டிற்கு அழைக்கப்படவில்லை.

இலங்கை அரசு நினைத்திருந்தால், ஏற்கனவே புலிகளைத் தடைசெய்துள்ள அமெரிக்காவில் இம்மாநாட்டைக் கூட்டாமல், புலிகள் சென்று கலந்துகொள்ளக்கூடிய ஒரு நாட்டில் மாநாட்டை நடாத்த உரிய நடவடிக்கை மேற்கொண்டிருக்க முடியும்.

யுத்தத்தினால் முற்றாக சீரழிந்து போயுள்ள வடக்கு-கிழககுப் பிரதேசத்தைப் புனரமைப்புச் செய்வதற்குச் சர்வதேச சமூகம் தயாராக இருக்கிறது.

இவ்வேளையில் - இலங்கை அரசு கபடத்தனமாக இம்முயறசீகளில் புலிகளைப் புறந்தள்ளிவிட்டு - 'முழு இலங்கையும் போரினால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் முழு இலங்கையினதும் பொருளாதாரம் சீரழிந்துள்ளது. எனவே வடக்கு - கிழக்கை மட்டும் முன்னேற்றுவதற்கு முடியாது. முழு இலங்கையையும் அபிவிருத்தி செய்வதற்குரிய செயறதிட்டத்தை முன்வைக்க வேண்டும்' என்ற நோக்கில் தமது தரப்பில் தனியாகத் தயாரித்த ஆவணத்தைச் சமர்ப்பித்துள்ளது.

முன்னர் ஏற்றுக்கொண்ட முடிவுகளுக்குப் புறம்பான, முன்னுக்குப்பின் முரணான இலங்கை அரசின் இந்த நடவடிக்கையானது பொருத்தமற்றதொன்று. இதனைத் தமிழர்களாகிய நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

ரோக்கியோ மாநாடு முற்றுமுழுதாக வடக்கு-கிழக்கின் புனர்வாழ்வை, அதன் மீள் அபிவிருத்தியை முதன்மைப்படுத்த வேண்டும். ஏனைய பகுதிகளையும் இணைத்துக் கொண்டு அபிவிருத்தி செய்யப்போவதாகக் கூறுவது சரியானதல்ல. வடக்கு-கிழக்கின் அபிவிருத்தியே முதன்மையானதாகப் பேசப்படல் வேண்டும்.

இலங்கையின் ஏனைய மாகாணங்களைப் போன்று வடககு-கிழக்கைக் கணிக்கக்கூடாது.

தமமால் தயாரிக்கப்பட்டுள்ள ஆவணமானது- இலங்கையின் பொதுமக்களது கருத்துக்களின் தொகுப்பு என இவ் ஆவணத்தில் அமைச்சர் மிலிந்த மொறகொட கூறியுள்ளார். இதுவும் ஒரு ஏற்றுக்கொள்ளமுடியாத கூற்றே.

இந்த ஆவணத்தின் உண்மைத்தன்மையும், நியாயத் தன்மையும் குறித்து நாம் சந்தேகம் கொள்ளவேண்டியதாகவுள்ளது.

இந்த அமர்வில் எமது தொழிற்சங்கங்களின் கருத்தை இந்த ஆவணங்களின் தொடர்பில் வெளியிட வேண்டும். இக்கருத்துக்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு, எமது தொழிற்சங்க சர்வதேச கூட்டமைப்பிற்குத் தெரியப்படுத்தப்படுவதுடன் எமது தொழிற்சங்கங்கள் தொடர்பு வைத்துள்ள நாடுகளின் அரசுகளுக்கும், அந்தந்த நாட்டு எமது சகோதர தொழிற்சங்க அமைப்புகள் மூலம் தெரியப்படுத்தி, அதன்மூலம் சர்வதேச அபிப்பிராயத்தை இது தொடர்பில் ஏற்படுத்தமுடியும்.

சர்வதேச சமூகத்திற்கும், சமாதான முன்னெடுப்பில் ஈடுபட்டுள்ள நோர்வே மற்றும் ஜப்பானிய அரசுகளுக்கும் இந்தத தெளிவுபடுத்தல் மூலம் தமிழர் தரப்புக்கு நியாயம் கிடைக்க வழிசெய்ய நாம் அனைவரும் செயற்படவேண்டும். என்று அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

அமெரிக்க தொழிலாளர்களின் ஒத்துழைப்பிற்கான மத்திய நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு தொடர்ந்து மட்டக்களப்பில் நாளை மறுநாளும், யாழ். நகரில்

# கல்முனையில் வர்த்தகர் சுட்டுக் கொல்லப்பட்டார்

(கொழும்பு)

கல்முனை - சாய்ந்தமருதுவில் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.கடந்த திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆதம்பாவா சாகுல் ஹமீத் (வயது-44) என்பவரே கொல்லப்பட்டவராவார். இரவு தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்கள் கதவைத் தட்டினர்.

இவரது மனைவி கதவைத் திறந்ததும், பிஸ்ரலுடன் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் படுக்கையில் இருந்த ஆதம்பாவா சாகுல் ஹமீத்தைச் சுட்டுக்கொன்றனர்.

இவர் மக்கள் விழிப்புணர்வுக் குழுவின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்டி நீதிமன்றிற்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

உடதலவின்ன படுகொலை வழக்கு விசாரணைகள் நடைபெற்றுவரும் கண்டி நீதிமன்றத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிறேமலால் ரணகார தெரிவித்தார்.

இந்த வழக்கில் பிரதான சந்தேகநபர்களாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மற்றும் அவரது மகன்களான சானுக, லொகான் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவே விசேட அதிரடிப்

கத்திற்குச் சர்வதேசம் அழுத்தம் தருமாயின் - சமாதான முயற்சிகளை சுமுகமாக முன்னகர்த்திச் செல்ல சந்தர்ப்பங்கள் வாய்க்கமுடியும்.

ஒருபுறம் மக்களின் அவலவாழ்வு தொடரவும், இராணுவம் தனது தளங்களை, மக்கள் குடிமனைகளிலிருந்து நகர்த்துவதற்குத் திட்டமிட்ட தாமதங்களையும், சாட்டுப்போக்குகளையும் சொல்லிவரவும், வட - கிழக்கில் அபிவிருத்தி பற்றியும் புனர்வாழ்வு- புனரமைப்புத் தொடர்பாகவும் பேச்சளவில் அரசாங்கம் அறிவிப்புக்களை விடுக்கவுமாக - சமாதானம் எங்கு, யாரால் தடைகண்டு நிற்கிறது என்பதை சர்வதேசம் உணர்ந்து, தனது அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் மூலமே - சமாதானத்தை நகர வைக்க முடியும்.

வெறுமனே பேசிக்கொண்டிருப்பதன் மூலமும், உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்கேற்பதன் மூலமும் - தனக்காதாயமான அரசியல், பொருளாதாரச் சூழலையே அரசாங்கம் உருவாக்கி வரும் நிலையில். -

சமாதானப் பேச்சுக்ளைத் தொடரச் செய்ய - சர்வதேசத்திற்குள்ள பொறுப்பும், கடமையும் இனி அதிகமாகவே இருக்கின்றன.

அமைதி முயற்சிகள் சரியான திசையில் செல்வதற்கு சர்வதேசம் என்ன செய்யப்போகின்றது என்பதன் பொருட்டே, அரசாங்கமும் செம்மையாகச் செயற்பட, துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள அதனால் நிர்ப்பந்திக்கப்படும்.

அமைதிவழியில் தாம் உறுதியாயிருப்பதையும், மீண்டுமொரு யுத்தத்தை ஆரம்பிக்கும் எண்ணம் தம்மிடம் அறவே இல்லையென்பதையும் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகவும், பகிரங்கமாகவும் வெளிப்படுத்திய பின்னர் - விடுதலைப் புலிகள் அமைதிவழியில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு காட்டும் அர்ப்பணிப்பை மதித்து - கௌரவிப்பதுடன் - சர்வதேசம், தனக்குள்ள பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்றி - அரசாங்கத்தை நேர்மையான முறையில் செயலாற்றவைக்க வேண்டுமென்றே தமிழ்மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவே விசேட அதிரடிப் படை மற்றும் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு தொடர்ந்து மட்டக்களப்பில் நாளை மறுநாளும், யாழ். நகரில் 11 ஆம் திகதியும் நடாத்தப்படவுள்ளதாக இணைப்பாளர் கூறினார். (க்)

# கிழக்குப் பகுதியில் கடமையாற்ற விரும்பினால் பொதுச்சேவை ஆணைக்குழு நியமனம் வழங்கும்

## நிர்வாகசேவை ஆட்சேர்ப்பு குறித்து நீதிமன்றில் பதில்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையின் 2 ஆம் வகுப்புக்கு 2001 ஆம ஆண்டு நடத்தப்பட்ட ஆட்சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், வடக்கு - கிழக்கில் கடமையாற்றுவதற்கு விரும்பின் அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று பொதுச்சேவை ஆணைக்குழு உயர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளது.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் இந்தத் தீர்மானம் அரச சட்டத்தரணி ரஜீவ குணதிலகாவால் உயர் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் திகதி நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நியமனங்கள் வழங்குவதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட மனித உரிமை மீறல் வழக்கின்போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்.எம்.பி.என்.குமாரி வெலியத்த என்பவரால் நீதிமன்றத்தில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த, அமைச்சர் வஜிர அபேவர்த்தன அடங்கலாக 12 பேர் இந்த முறையீட்டில் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

நிர்வாகசேவையின் 2 ஆம் வகுப்பு 2 ஆம் தரத்துக்கு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியெய்தியோருக்குப் புறம்பாக- வடக்கு - கிழக்குப் பகுதியில் நடத்தப்பட்ட விசேட பரீட்சைமூலம் 117 பேருக்கு முதலில் நியமனம் வழங்குவது மனித உரிமை மீறல் என இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

காத்திக் பெர்னாண்டோ, சி.வி.வக்னேஸ்வரன், ரி.வி.வீரசூரியா ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் இம்முறையீடு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்விசாரணையின்போது, சட்டத்தரணி ரஜீவ் குணதிலக குறிப்பிடுகையில் - கிழக்கில் கடமை புரிவதற்கு விருப்பமாயின், வழக்கைத் தாக்கல் செய்தவருக்கு நியமணம் வழங்குவதற்குப் பொதுச்சேவை ஆணைக்குழு தீர்மானம் எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த முறையீட்டின் இறுதித்தீர்ப்பு ஜுலை மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# வாழ்க்கையுடனும், இயற்கையுடனும் ஒன்றித்திருக்கும் இந்து சமயம்!

இரண்டாவது உலக இந்து மாநாடானது இலங்கையில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெகுசிறப்பாக கடந்த 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை நடைபெற்றது. இந்த மாநாட்டின் பிராந்திய மாநாடு நுவரலியாவில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் இன்றும் நாளையும் பிராந்திய மாநாடு இரு தினங்கள் வெகுசிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்திலிருந்து வந்துள்ள பெரியோரும் இம்மாநாட்டில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இன்று நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்திலும், நாளை சனிக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்திலும் இரு தினங்கள் மாநாடு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பிராந்திய மாநாட்டின் முதல்நாள் நிகழ்வுகள் - யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

மாநாட்டு விழாவிலே பிரதம விருந்தினராக இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்து சிறப்பிப்பார்.

முதல்நாள் விழாவில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் "திருமுறை அரங்கும்", கலாநிதி மா.வேதநாதன் தலைமையில் "இளைஞர் அரங்கும்", நா.வி.மு.நவரத்தினம் தலைமையில் "பண்ணிசை அரங்கும்", கவிமாமணி மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன் தலைமையில் "சைவமும் தமிழும் எங்களின் கண் கள்" என்ற தலைப்பில் சிறப்புக் கவியரங்கமும் நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுகளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் "மகளிர் அரங்கு" நடைபெறும்.

நீண்ட இடைவெளிக்குப்பின் இந்த மாநாடு நடைபெறுவதற்கு இறையாசி பெருகிவந்துள்ளது. நீண்ட காலமாக ஈழத்தமிழின மக்களின் வாழ்விலே துன்பத்தைப் போக்கி, மக்கள் வாழ்வில் சமூக, கலை, கலாசார பண்பாட்டிலே மறுமலர்ச்சி ஏற்படுத்தி, சைவ ஆன்மீக விழுமியக் கோட்பாடுகளை, நிறைவான ஆன்மீக பலத்தை ஏற்படுத்துவதற்காக இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் இந்து மாநாட்டைத் தொடக்கியுள்ளார்.

இம்மாநாட்டின் தொனிப்பொருள்களில் ஒன்றாக "ஈழத்தின் இனப்போரில் சிதைவுற்ற ஆலயங்களை மீண்டும் புனரமைத்து - அங்குள்ள தடைகளை நீக்கி மக்களின் சுதந்திரமான வழிபாட்டுக்கு அனுமதித்தல்" என்பதை இம்மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றவேண்டியது அவசியம்.

ஈழத்திலே இருபது ஆண்டுகள் நடைபெற்ற கொடிய யுத்தத்தின் போது, சுமார் 3000 இந்து ஆலயங்கள் குண்டுவீச்சினாலும், ஷெல் தாக்குதலினாலும் சேதமடைந்தும், அழிவுற்றும் விட்டன. இவற்றுள் நாயன்மார்களினால் பாடல்பெற்ற தலங்களும், மூவேந்தர்களால் நிறுவப்பெற்ற தலங்களும் அடங்கும்.

ஈழத்திலே இந்து மதத்தினை மீண்டும் பொலிவுறச் செய்வதற்கு இந்தப் பழம்பெரும் திருப்பதிகள் புதுப்பொலிவு பெறவேண்டும்.

திருமூலரால் 'சிவபூமி' என அழைக்கப்பட்டது எங்கள் ஈழமணித் திருநாடு. இராவணன் சிவபூசை செய்து வழிபட்டு வாழ்ந்த நாடு. இவ்வாறாகச் சிவமணங்கமழும் சமயப்பற்று, ஆன்மீகநெறி தழைத்தோங்கிய எமது நாட்டிலே எத்தனை எத்தனை சமயநெறிகள் இருந்தாலும், ஆதியும் அந்தமுமில்லாத சிவபெருமானை முழுமுதற் பரம்பொருளாகக்கொண்ட இந்து சமயம் - சமயங்களுக்கெல்லாம் மூத்தது.

இந்து தர்மத்தின் பெருமைகளையும், அதன் சிறப்பியல்புகளையும் உலகளாவிய ரீதியில் வெளிப்படுத்த சுவாமி விவேகானந்தர் பலமான அத்திவாரத்தைப் பன்னெடும் ஆண்டுகளுக்கு முன்னரே இட்டுள்ளார். சுவாமியின் வழியில் பல ஆன்மீக பற்றாளர்களும், ஞானிகளும், சுவாமிகளும், சமயத் தலைவர்களும் இந்து சமயத்தின் கொள்கையை, நெறியை உலக மக்களிடையே பரவச்செய்து வருகின்றார்கள்.

இந்த வேளையில், இந்துமதப் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், அதன் விழுமியங்களையும் முன்னெடுக்கும் நோக்கிலே "மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெலாம்" என்ற தொனிப்பொருளிலே இரண்டாவது மாநாடு நாடளாவிய ரீதியிலும் நடத்தப்படுகின்றது.

இந்துக்களைப் பொறுத்தவரையில் முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். மதம் என்பது சரியாகப் புரிந்துகொள்ளப்படுமானால், அது யாருக்கும் விரோதியல்ல. மனம் வளர்ந்தால் - மனிதன் வளர்வான். இந்த மனதை வளர்ப்பதற்காக ஏற்பட்டது மதம். ஆக மனிதனின் மனவளர்ச்சிக்காக இந்த ஆன்மீகம், மதம் இருக்கின்றது. நமது இந்துமதம் வாழ்க்கையுடன் ஒட்டியிருக்கின்றது. இயற்கையோடு இணைந்திருக்கின்றது.

வேம்பமரத்தில் இருக்கிறது, அரசமரத்தில் இருக்கிறது, குளத்தங்கரையில் இருக்கிறது. வாழ்கக்கை முறையென்பதுதான் மதம் என்று ஆனபிறகு, வாழ்க்கை முறையை வெறுப்பது சரியல்ல. அதனால், முறையான வாழ்க்கையை விரும்புபவர்கள மதத்தை வெறுக்கக்கூடாது.

**கவிமாமணி. மதுரகவி**
**காரை. எம்.பி.அருளானந்தன்**







இரண்டாவது உலக இந்து மாநாட்டினை முன்னிட்டு இந்துமத குருமார் ஒன்றியம் நேற்று முன்தினம் நல்லை ஆதீனத்தில் நடத்திய யாழ். பிராந்திய மாநாட்டு நிகழ்வுகளில், மங்கள விளக்கை சிவாச்சாரியார் ஒருவர் ஏற்றுவதை முதலாவது படத்திலும், நந்திக் கொடியினை சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி மகேஸ்வரக்குருக்கள் ஏற்றிவைப்பதை இரண்டாவது படத்திலும், சிவாச்சார்யார்கள் மேடையில் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

படங்கள்:- ராஜ்குமார்.

# மூன்று நாட்கள் நடக்கவுள்ள திருமறைக் கலாமன்ற மாநாடு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களும் நடைபெறவுள்ள "திருமறைக் கலாமன்ற மாநாட்டில்" பெருந்திரளாக மூவின மக்களும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று தினங்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், முதலாவது கட்டமாகப் பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர குழுவினரின் "சிங்கபாகு" என்னும் நாடக வடிவமும், ஹரோல்ட் டீ சில்வாவின் 'லுக் அட் மீ (Look at me)' என்னும் ஆங்கில நாடகமும், சோமலதா சுபசிறியின் 'தொப்பி வியாபாரிகள்' எனும் சிறுவர் நாடகமும், வசந்த ஒபயசேகராவின் திரைப்படம் ஒன்றும், புதுவை அன்பனின் 'கரைதேடும் ஓடங்கள்' எனும் நாடகமும் இடம்பெறுகின்றன. (சு)

# சின்னஞ்சிறு செய்திகள்

## நடுவர் குழுக்களின் தலைவர்கள் நியமனம்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி வவுனியா மாவட்ட உள்ளூராட்சிமன்றத் தினப்போட்டிகளுக்கான நடுவர்குழுத் தலைவராகவும், வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.கந்தசாமி முல்லைத்தீவு மாவட்ட போட்டிகளுக்கு நடுவர்குழுத் தலைவராகவும், வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர். (17)

## ஆசிரிய கலாசாலை 12 ஆம் திகதி ஆரம்பம்

(புத்தூர்)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வகுப்புக்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாகக் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (110)

## பாலர் பாடசாலைகளில் இந்து மாநாட்டு நிகழ்வுகள்

(பாஷையூர்)

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் 17 பாலர் பாடசாலைகளிலும் இரண்டாம் உலக இந்து மாநாட்டையொட்டிய நிகழ்வுக்கள் இடம்பெற்றுவருகின்றன. இந்தவகையில் முன்பள்ளி சிறுவர்களின் பாடல், ஆடல், அபிநய நிகழ்வுகள் 5 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இதற்கான ஒழுங்குகளைக் கழகத் தலைவர் எஸ்.பி.காசிநாதன் நெறிப்படுத்தி வருகின்றார்.

அத்துடன் கொடிகளாலும், பதாகைகளாலும் அலங்கரிக்கப்பட்டு மாவிலை தோரணம், வாழைமரம் நடப்பட்டு பாலர் பாடசாலைகள் அனைத்தும் விழாக்கோலம் பூண்டு விளங்குவதையும் அவதானிக்க முடிகிறது. (119)

# சீருடை கூப்பன் கிடைக்காதோர் பிரதேச செயலகத்தில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்துக்கான பாடசாலைச் சீருடைகள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விநியோகிப்பது, இம்மாதம் 15 ஆம் திகதியுடன் முடிக்கப்பட வேண்டுமென்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதனால், கடந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிவரை பாடசாலைச் சீருடைக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மாணவருக்கான சீருடைக் கூப்பன்கள் கிடைக்காத பெற்றோர் - பிரதேச செயலகத்தில் அவர்களுக்குரிய கூப்பன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இக்கூப்பன்களை உபயோகித்து, எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் - கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ளும்படி பெற்றோர்களை யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.

# கைதடி முதியோர் இல்ல சூழலில் தெங்கு மீள்நடுகை மேற்கொள்க!

## தென்மராட்சி பிரதேச செயலரிடம் கோரிக்கை

கைதடி முதியோர் இல்லத்தைச் சுற்றியுள்ள பெருமளவு நிலம் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்பட்டு வருவதாக முதியோர் இல்லப் பொறுப்பதிகாரி - தென்மராட்சிப் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரனுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இப்பெரும் நிலப்பரப்பை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் தென்னை மீள்நடுகைத் திட்டத்திற்குப் பயன்படுத்துவது மிகப் பொருத்தமாக இருக்கும் எனவும் முதியோர் இல்லப் பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார். (25)

# உலக இந்து மாநாட்டை முன்னிட்டு அரியாலையில் சிறப்பு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்றுவரும் இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு அரியாலை ஸ்ரீ அண்ணமார் ஆலயத்தில் மிகக் கோலாகலமாக இந்து கலாசார விழா நடைபெற்று வருகிறது.

சமய அறிவினைப் பெருக்குவதற்காக மாணவர்களிடையே நடத்தப்படும் - இந்துசமயத்தின் சிறப்பைச் சித்திரித்துக்காட்டும் சித்திரப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, கோலம் அமைத்தல், விநோத உடைப்போட்டி, சமய அறிவுப் போட்டி, விநாடி வினாப் போட்டி என்பவற்றில் பெருமளவில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றுப் பரிசில்களைப் பெற்றுவருகின்றனர்.

அத்துடன் - பக்திப் பாடல்கள், சொற்பொழிவுகள், பட்டிமன்றம், பஜனைப் பாடல்கள் போன்ற நிகழ்வுகள் அரியாலைப் பிரதேச மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

10 நாட்கள் கொண்டாடப்படும் இவ்விழாவுக்கு - வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்பவர்களும், அரியாலைப் பிரதேசத்தில் உள்ள மக்களும் - பரிசில்களையும், விழாச் செலவுகளுக்கான நிதியினையும் வழங்கி வருகின்றனர். மேற்படி நிகழ்வுக்காக அரியாலைப் பகுதியில் வீதி வளைவுகளாலும் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

# நோர்வே குழு - புலிகள் சந்திப்பிலிருந்து...



பேச்சுக்களுக்கு வரும் நோர்வேக் குழுவினர்



எரிக் சொல்ஹெய்ம், தூதுவர் பிரெட்ஸ்கர்



பேச்சுக்களில் நோர்வேத் தரப்பு



விடுதலைப் புலிகள் தரப்பினர்



செய்தியாளர் சந்திப்பில் தமிழ்ச்செல்வன், பாலா



சொல்ஹெய்ம் புறப்படத் தயார்



சிந்தனை...



பிரியாவிடை...

## ஹங்கேரியில் கோர விபத்து; 30 உல்லாசப் பயணிகள் பலி!

ஹங்கேரியில், ஜேர்மன் உல்லாசப்பயண பஸ் ஒன்று ரயிலுடன் நேருக்கு நேர் மோதியதில், 30 பயணிகள் பலியாகினர். ஹங்கேரியில் உல்லாசப் பயணிகளைக் கவரும் பலாற்றன் வாவியருகே ரயில் கடவையைக் கடக்க முயன்ற பஸ் வண்டிமீதே ரயில் மோதியுள்ளது.

38 பயணிகளுடன் வந்த இரட்டைத்தட்டு பஸ் - ரயிலுடன் மோதுண்டதில் இரண்டாகப் பிளந்து தீப்பற்றியுதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிளவுண்ட பஸ்ஸின் ஒரு பகுதி ரயிலுடன் சிக்குப்பட்டு சுமார் 150 மீற்றருக்கு இழுபட்டுச் சென்றுள்ளது. ரயில் கடவையருகே இருந்த சிவப்புச் சமிக்ஞை விளக்கை பஸ் சாரதி கவனியாது சென்றதே, இக்கொடூர விபத்துக்குக் காரணம் என ஹங்கேரிப் பொலிஸார் கூறுகின்றனர். இவ் விபத்தில், ரயில் சாரதியும் காயமடைந்துள்ளார். மீட்புப்பணிகள் தொடர்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.



விபத்தில் சிக்கிச் சிதிலமாகிக் கிடக்கும் பஸ்.

## அளவுக்கதிக விற்றமின் குளிகை உடல் நலத்துக்கு ஆபத்தானது!

### பிரிட்டனின் உணவுத்தர நிர்ணயக் கழகம் எச்சரிப்பு

பீற்றா கரோட்டின், நாகம் போன்ற தாதுப்பொருட்களைக் கொண்ட விற்றமின் குளிகைகளை, அளவுக்கதிகமாக உட்கொள்வது, உடல் நலத்துக்கு தீங்கானது என - பிரிட்டனின் உணவுத் தரநிர்ணயக் கழகம் எச்சரித்துள்ளது.

இதுதவிர - விற்றமின் சி, கல்சியம், இரும்புச்சத்து அடங்கிய குளிகைகளும் அதிகளவில் நீண்ட காலத்துக்கு உள்ளெடுக்கப்படின் உடலுக்குத் தீங்கானது என்றும் அக்கழகம் எச்சரித்துள்ளது.

அளவுக்கதிகமாக உள்ளெடுக்கப்படும் இத்தகைய மருந்துப் பொருட்கள் - புற்றுநோய், நரம்புத்தளர்ச்சி, கலங்களின் இழைய அழற்சி என்பவற்றைத் தோற்றுவிக்கும் எனச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இந்த மருத்துவ - இரசாயன ஆய்வுகள், 31 விற்றமின் மற்றும் தாதுப்பொருட்களில் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### கலைப் பொக்கிஷங்கள் ஈராக்கில் மீட்பு!

ஈராக்கின் தொல்பொருள் காட்சியகத்திலிருந்து திருடப்பட்ட ஆயிரக்கணக்கான அரும்பொருட்களை மீட்டுள்ளதாக, ஈராக்கில் பணிபுரியும் அமெரிக்க சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலகவலம்

சுமார் 40 ஆயிரம் புராதன எழுத்துச் சுவடிகளும், 700 கலைப்பொருட்களும் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

## இந்தியாவுடன் இணக்கநிலை; ஆர்மிரேஜ் பாகிஸ்தான் விஜயம்

இந்திய - பாகிஸ்தான் உறவுகளை வளர்க்கும் ஒரு முயற்சியாக, அமெரிக்க பிரதியமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் பாகிஸ்தான் சென்றுள்ளார். பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி, வெளியுறவு அமைச்சர் கசூரி மற்றும் ஜனாதிபதி முஷாரப் ஆகியோரை ஆர்மிரேஜ் சந்திக்கவுள்ளார்.

இந்தியாவும் - பாகிஸ்தானும் மீண்டும் பகைமையற்ற அயல் நாடுகளாக விளங்குவதையே அமெரிக்கா விரும்புவதாக ஆர்மிரேஜ் கூறினார்.

எனினும் - எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் கைவிட்டால் மட்டுமே, பாகிஸ்தானுடனான உறவில் அர்த்தமிருக்குமென இந்தியத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## ஈராக் மீதான தடையை நீக்க அமெரிக்கா திட்டம்

(பக்தாத்)

ஈராக் மீதான பொருளாதாரத் தடையை நீக்குமாறு கோரி, அமெரிக்கா ஐ.நா.சபையில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவுள்ளது. பாதுகாப்புச் சபையில் இவ்வாரம் இந்தப் பிரேரணையை பிரிட்டன் மற்றும் ஸ்பெயின் நாடுகளின் உதவியுடன் அமெரிக்கா கொண்டுவரும் என அமெரிக்க உள்துறை அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.



1990 இல் குவைத் மீதான படையெடுப்பையடுத்து ஈராக் மீது அமெரிக்கா ஐ.நா.சபையூடாக பொருளாதாரத்தடைகளை கொண்டுவந்திருந்தது. தடைகள் கொண்டுவரக் காரணமான ஆட்சி, இப்போது அங்கில்லை என்பதால் தடையை நீக்க உத்தேசித்துள்ளோம் என கொலின் பவல் குறிப்பிட்டார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருமலையில் புலிகளின் படகு தடுத்துவைக்கப்பட்டு விடுவிப்பு

## இரு போராளிகள் பொலிஸாரால் கைது

(திருகோணமலை)

திருகோணமலை, கோணேஸ்வரர் ஆலயக் கடற்பகுதியில் வைத்து, விடுதலைப் புலிகளின் பிளாஸ்ரிக் படகு ஒன்றை கடற்படை கைப்பற்றியுள்ளதாக, கொழும்பில் இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரட்ண நேற்றிரவு தெரிவித்தார்.

நிலாவெளியிலிருந்து வந்த இப் படகில், மூன்று பேர் இருந்ததாகவும், இவர்களை நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில், கடற்படையினர் வழிமறித்தபோது, அவர்கள் தாம் விடுதலைப் புலிகள் என அடையாளம் காட்டினர் எனவும் கருணாரட்ண தெரிவித்தார்.

கடற்படை தமது படகை சோதனையிடுவதை கடுமையாகப் புலிகள் ஆட்சேபித்ததையடுத்து, இது குறித்து திருமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு கடற்படை அறிவித்தது. மாலை 5 மணியளவில் சம்பவ இடத்துக்குக் கடற்கண்காணிப்பாளர்கள் வந்ததையடுத்து படகு சோதனையிடப்பட்டது. படகினுள் தகரக் கொள்கலன் ஒன்றினுள் - பத்து கிலோ வெடிமருந்து காணப்பட்டதையடுத்து, படகிலிருந்த இரண்டு போராளிகளும் மற்றொருவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடற்படை மேலதிகாரிகளின் பணிப்பையடுத்து - படகும், போராளிகளும் திருமலை கடற்படைத் தளத்திற்கு கொண்டுசெல்லப்பட்டதாயினும், பின்னர் படகுடன் ஒருவர் விடுவிக்கப்பட, போராளிகள் இருவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (10)

# மக்களின் நிலையை அறியவே சொல்ஹெய்மை அனுப்பினோம்

## வடக்கு - கிழக்கு விஜயம் குறித்து பாலா

இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வெறுமனே கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு வந்து எம்மைச் சந்தித்து விட்டுப் போகாமல், வட - கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளை நேரில் சென்று பார்வையிடுமாறு நாம் தெரிவித்ததன் நிமித்தமே, அவர் வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்தார் என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றைய நோர்வேக் குழுவினருடனான பேச்சு முடிவில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எரிக் சொல்ஹெய்ம் எமது பகுதிகளில் இடம்பெயர்ந்து அகதிகளாயிருக்கும் மக்களையும், அவர்களின் பிரச்சினைகளையும் நேரில் கண்டறிந்துள்ளார். வட - கிழக்குப் பகுதி மக்கள் அனுபவிக்கும் அவலங்களைத் தான் நேரில் கண்டதாகவும், அவர்களுடன் பேசி அவர்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றி தாம் பலவற்றை அறிந்திருப்பதாகவும், எங்களிடம் சொல்ஹெய்ம் தெரிவித்தார். இப்போது அவருக்கு ஓரளவுக்கு வட - கிழக்கு மக்கள் படும் அவலநிலை குறித்து விளங்கியிருக்கும் என நாம் நினைக்கிறோம் எனக் கூறினார்.



கிளிநொச்சியிலுள்ள ஆதரவற்ற முதியோர் இல்லத்துக்கு நேற்றுக் காலை விஜயம்செய்த நோர்வேக் குழுவினர், அங்கு தங்கியுள்ள முதியவர்களுடனும் இல்ல நிர்வாகிகளுடனும் காணப்படுகின்றனர்.

## ஆதீனத்தில் இந்து மாநாடு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய உலகமாநாட்டின் யாழ்ப்பாண பிராந்திய மாநாடு, இன்று மாலை 6.00 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய அலுவல்கள் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் இம்மாநாட்டில், தென்னிந்திய பேச்சாளரான பேராசிரியர் இரா.செல்வகணபதி, டாக்டர் அ.மலர், இ.தமிழரசி ஆகியோரும் சொற்பொழிவு நடத்தவுள்ளனர்.

அத்துடன், டாக்டர்.கண்ணப்பன், வாசகி கண்ணப்பன், லலிதா சுந்தரம், கஸ்தூரி ராஜா ஆகியோரது 'முருகனின் வேல் வெல்லும்' இசை நடனமும் நடைபெறும் என இந்துசமய விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீனவரை மிரட்டிய கடற்படை

நெடுந்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடையில் உள்ள கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் நேற்று கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டனர்.

நேற்றுப் பகல் இப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நான்கு நெடுந்தீவு பிரதேச மீனவர்களை, அங்கு அதிவேகப்படகில் வந்த கடற்படையினர் மிரட்டியுள்ளதுடன், அவர்களை கடலில் குதிக்குமாறு உத்தரவிட்டனர். இவர்களில் இரு மீனவர் தமக்கு நீந்தத் தெரியாது என்று கூறியபோதும், அவர்களை மிரட்டிக் கடலில் குதிக்கச் செய்தனர். சிறிதுநேரம் கடலில் தத்தளித்த மீனவர்களை மீண்டும் படகில் ஏறப் பணித்துவிட்டு அங்கிருந்து கடற்படையினர் சென்றுவிட்டனர்.

இப்பகுதியில் மீனவர்கள் அடிக்கடி கடற்படையினரால் அச்சுறுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (113)

## மீளக்குடியமர அனுமதி கேட்டு வலி வடக்கு மக்கள் வழக்கு

1990 ஆம் ஆண்டு வலிகாமம் வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் வாழ்கின்ற மக்கள், தமது சொந்த இடங்களில் மீளக்குடிமயர அனுமதிக்குமாறு கோரி, உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முயற்சிகள் மேற்கொள்கின்றனர்.

வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக் கழகம் இதற்கான ஒழுங்கமைப்புக்களைச் செய்துள்ளது.

சுமார் 5000 குடும்பங்கள் இந்த வழக்கினைத் தாக்கல்செய்ய விபரங்களை வழங்கியுள்ளன. (09)

## வவுனியாச் செய்தியாளருக்கு தொலைபேசியில் மிரட்டல்

வவுனியாவிலுள்ள செய்தியாளர் மாணிக்கவாசகத்திற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியினால் கொலைமிரட்டல் விடுக்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மன்னார்ப் பகுதியிலிருந்து வந்த தொலைபேசி அழைப்பில், அவருடைய உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக, வவுனியா பொலிஸ்நிலையம், யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பிரிவினுடைய வவுனியா அலுவலகத்திலும் முறையிடப்பட்டுள்ளது.

# நம்பியாரின் அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைப்பு

## நாடாளுமன்றில் பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக, இந்திய இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சதீஷ் நம்பியாரின் அறிக்கையை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளதாக, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தான் ஆற்றியிருந்த சமாதான நிலவரம் தொடர்பான உரை மீதான விவாதத்தின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள சதீஷ் நம்பியார், நேற்றைய தினமே அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கையைத் தம்மிடம் சமர்ப்பித்ததாகவும், அதனை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அவற்றில், தேசிய பாதுகாப்புப் பற்றிய பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதால், தேசிய பாதுகாப்பின் நலன்கருதி, அதன் விபரங்களை உடன் சபைக்குச் சமர்ப்பிக்க முடியாதுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த அறிக்கையை, பத்திரிகை ஆசிரியர் குழுவின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும் தேவையாயின் - அலரி மாளிகைக்கு வந்து பார்வையிடலாம் எனவும் பிரதமர் ரணில் தெரிவித்தார். (01)

## புலிகளுடனான பேச்சை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை என்கிறார் பீரிஸ்

சிறான் அமைப்பின் செயற்பாட்டை பலப்படுத்தி, மீள்குடியமர்வை வேகப்படுத்துவதன் மூலம், விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர - இலங்கை அரசாங்கம் பொருத்தமான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ஜி.எல். பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவை கூட்டத்திற்குப் பின்னரான செய்தியாளர் மாநாட்டில் பேசிய பீரிஸ், இதுகுறித்து பிரதமர் ரணில், ஜப்பான் மற்றும் நோர்வே தூதுவர்களுக்கு தகவல் வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் பேச்சிலிருந்து முற்றாக விலகவில்லை. மீள்குடியமர்வு, சிறான் செயற்பாடு போன்ற விடயங்களை அரசு அமுல்செய்தால் மீண்டும் பேச்சுக்களில் கலந்து கொள்வதாக உறுதியளித்துள்ளனர் என்றும் பீரிஸ் கூறினார்.

## நடமாட்டத்தை...

வெளியிடுகையில், மீனவர்கள் சுதந்திரமாக கடலில் இறங்கமுடியவில்லை. கடற்படையினர் அவர்களை மிரட்டுகின்றனர். போர் நிறுத்தத்தை மீறமுடியாது என்பதற்காக ஒருவருடமாக நாம் பொறுமையைக் கடைப்பிடிக்கிறோம். எமது கடற்புலிகளுக்கு பயிற்சிகள் வழங்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது. இதற்காக நாம் கடலில் சுதந்திரமாக நடமாட வேண்டிய அவசியம் உள்ளது. இத்தகைய செயற்பாடுகளுக்கு ஒரு உடன்பாட்டை நாம் எட்ட வேண்டும். இல்லாவிடின் நாம் எமது செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்வதைத் தவிர்க்க முடியாது என கேணல் சூசை மேலும் தெரிவித்தார்.

## ஆக்கபூர்வமான முடிவு...

மாநாட்டுக்குச் செல்வதில்லை என, விடுதலைப் புலிகள் எடுத்த முடிவினை விளக்குமாறு நோர்வேக் குழுவினர் எம்மிடம் கேட்டார்கள். நாங்கள் என்ன காரணத்தினால் இந்த முடிவை எடுத்தோம், இந்த முடிவுகளை நாம் மீள்பரிசீலனை செய்வதாக இருந்தால் என்னென்ன காரியங்களை அரசாங்கம் செய்ய வேண்டும் என்பதை நேற்றைய சந்திப்பில் நோர்வே பிரதிநிதிகளுக்கு தெளிவாக எடுத்து விளக்கினோம்.

அரசாங்கத் தரப்பிலிருந்து இன்னும் உருப்படியான பதிலேதும் தரப்படவில்லை. நாங்கள் என்ன காரணத்திற்காக பேச்சுவார்த்தைகளை ஒத்திவைத்திருக்கிறோம் என்பதை விளக்கி கடிதம் ஒன்றை பிரதம மந்திரிக்கு அனுப்பினோம். இது வரைக்கும் பிரதம மந்திரி ஒரு பதில் போட்டிருக்கிறார். இந்த பதிலில் நாங்கள் எழுப்பிய எந்தப் பிரச்சினைக்கும் உருப்படியான பதிலெதுவும் தரப்படவில்லை. சில முக்கியமான விடயங்களை மூடி மறைத்து பிரதமர் பதில் தந்திருக்கிறார்.

ஆனால் - அதிலும் சில விடயங்களை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். எங்களுக்குத் தந்த வாக்குறுதிகளை அரசினால் உடனடியாக நிறைவேற்ற முடியவில்லையென்று அவர் ஒத்துக்கொண்டுள்ளார். ஆனால் அதைத் தீர்ப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆகவே - நாங்கள் நோர்வே பிரதிநிதிகளிடம் அரசாங்கம் உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காவிட்டால் தொடர்ந்து நாங்கள் எமது முடிவில் உறுதியாக இருப்போம் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

நாம் சமாதானப் பேச்சுவார்த்தைக்குப்போவதை தற்காலிமாக ஒத்தி வைத்திருக்கிறோம். ரோக்கியோ மாநாட்டுக்குப் போவதையும் தற்காலிகமாக ஒத்திவைத்திருக்கிறோம். ஆகவே, இனி அரசாங்கத்தின் கைகயில்தான் அனைத்தும் இருக்கிறது என்பதையும் நோர்வேக்குழுவிடம் வலியுறுத்தினோம்.

நம்பியாரின் அறிக்கை இன்னமும் எமக்கு வந்து சேரவில்லை. அது உத்தியோகபூர்வமாக பத்திரிகைகளிடம் அல்லது எங்களிடம் கிடைத்த பின்னரே இது தொடர்பாக நாம் பதிலளிப்போம் எனவும் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார். (லி)

## புலிகளின்...

திருமதி அடேல் பாலசிங்கம், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், கேணல் பானு, பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் பிறிதொரு இடமொன்றில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

பின்னர், அரசியல்துறை நடுவப் பணியகத்தை வந்தடைந்த நோர்வேத் தூதுக் குழுவினரையும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரையும், புலிகள் தரப்பினர் வரவேற்று, சந்திப்பு நடைபெறும் இடத்துக்கு அழைத்துச் சென்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனான இச்சந்திப்பில், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் பிரட்ஸ்கர், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன் ஆகியோர் பங்கேற்றனர்.

சந்திப்பு நிறைவடைந்த பின்னர், நோர்வேத் தூதுக் குழுவின்ருக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மதிய போசனம் வழங்கப்பட்டது.

இவர்கள் 2 மணியளவில் தமிழீழ காவற்துறையினரின் விசேட படையணியின் பாதுகாப்புடன், கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கு சென்று, உலங்குவானூர்தி மூலம் கொழும்பு திரும்பினர். (லி)

## அடிக்கடி...

வாறு பேச்சு நடைபெற்ற இடத்திலிருந்து, வெளியேறி பிறிதோர் இடத்துக்குச் சென்று, தனது கைத்தொலைபேசியில் உரையாடினார்.

## கனரக...

பிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் - பொஸ்னியாவில் இருப்பதைப் போன்று கனரக ஆட்லறிகள் மற்றும் பெரும் ஆயுதங்களை மூன்றாவது தரப்பின் கண்காணிப்பில் வைக்கவேண்டுமெனவும் ஜெனரல் நம்பியாரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.